...1630. SEPTEMBER & OCTOBER, 1923.

சுயம்பிரகாசத்துணை.

ஸம்ஷால் மஹறிபா என்னும்

ஞானசூரியன்

இது ஒரு நிகரில்லாத இனிய மாத சஞ்சிகை.

GNANA SURIYAN

A HIGH CLASS TAMIL MONTHLY.

மலர் 2.] | உருத்திரோற்காரிஷு புரட்டாசிமீ, ஐப்பசிமீ 1௳. | [இதழ் 6, 7.

Vol. II. | No. 6, 7.

பொருளடக்கம்.

விஷயம்.	பக்கம்.
கடவுள் வணக்கம்	121
சீவன்முத்தர்களிலக்கணம்—மணிமுத்துநாயகம்	122
காதலே கனவு—பத்திராதிபர்	126
பிள்ளைகளை வளர்த்தல்—ப. வீரப்ப தஞ்சவராயன், கருவேலி	131
திருமணப் பொருத்தம்—பத்திராதிபர்	136
கொல்லாமையே சிறந்த தருமம்—காரைச்சிவனடியார்	141
கோபம்—ப. வீரப்ப தஞ்சவராயன், கருவேலி	145
பெண்கள்பகுதி—பெண்மணி	149
வைத்தியம்—க. ஞானபூபதி	163
விளம்பரம்	164
மதிப்புரை	168

SCANNED

...சிகையிலுள்ள விஷயங்களை பத்திராதிபர் அனுமதியின்றி எவரும் பிரசுரிக்க அருகரல்லர்.

"ஞான சூரியன்"

சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன்முதலிய இடங்களுக்கு	வருடம் 1-க்கு தபால்கூலி உள்பட	ரூ. 1—8—0
பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளி நாடுகளுக்கு		ரூ. 2—0—0
தனி சஞ்சிகை விலை		ரூ. 0—3—0

மாதிரிப்பிரதி வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் உடனே இனமாக அனுப்பப்படும்

சந்தாதாரர்கள் சந்தா நம்பரைக்குறித்து எழுதினாலன்றி கடிதங்களுக்கு விடை யளிக்கப்படமாட்டாது.

சந்தாதாரராய்ச் சேரவிரும்புவோர் வி.பி.யிலனுப்பும்படி ஆர்டர்செய்யலாமேனும் முன்பணம் அனுப்பிவிடுவதே உத்தமம். ஏனெனில் மணியார்டர் செய்தால் ரூ. 1—8—0. வி. பி. யில் ரூ. 1—11—0 ஆகும். அதனால் தங்களுக்கு 3 அணா சகாயமிருக்கிறது. முதல் சஞ்சிகையிலிருந்து விஷயங்கள் தொடர்ச்சியாய் எழுதப்பட்டுவருவதால் யாவரும் ஆரம்பத்திலிருந்தே சேர்ந்துவருகிறார்கள். சந்தா தொகை ரூ. 1—8—0 சித்திரைமீ முதல்கொண்டு பங்குனி-மீ வரையில் கணக்கு வைத்துக்கொள்ளப்படும். இடையில் சந்தாதாரராய்ச் சேருபவர்களுக்கு சித்திரைமாதப் பத்திரிகைமுதல் சேர்த்து அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு ஒருமாசத்திற்கு	...	ரூபா	7—0—0
அரை பக்கத்திற்கு	,,	,,	4—0—0
கால் பக்கத்திற்கு	,,	,,	2—8—0

மொத்தமாய் ஒரு வருடத்திற்கு ஒப்பந்தம் செய்துகொண்டால் மொத்தத் தொகையில் 100-க்கு 12½ நூ வீதம் கழித்து வாங்கப்படும். எப்போதும் முழுதொகையை முன்பணமாயனுப்பவேண்டும். நீடித்த விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

விஷயங்கள்.

1. கடிதக்காரர்கள் அபிப்பிராயங்களுக்கு பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.

2. விஷயம் அனுப்புவோர் கடிதத்தின் ஒரே பக்கத்தில் இங்கியா... தெளிவாய் எழுதியனுப்பினாலன்றி, அவ்விஷயங்கள் கவனிக்கப்படமாட்டா.

3. விஷயங்களை திருத்தவும், அவற்றில் கூட்டவும், குறைக்கவும், அவற்றை வெளியிடவும் வெளியிடாமலே விட்டுவிடவும் பத்திரிகாசிரியருக்கு பூரண சுதந்திரமுண்டு. பதில் தெரிய விரும்புவோர் தபால் முத்திரை அனுப்பவும்.

முன்பணமாக ரூபாய் 25 (இருபத்தைந்து) செலுத்தும் ஜீவிய சந்தாதாரர் (Life Subscribers) கட்கு எக்காலத்திலும் பத்திரிகை இனமாக அனுப்புவதுடன் அவர்கள் பெயரை ஒவ்வொரு பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பெறும்.

கருணையானந்த ஞானபூபதி.

பத்திராதிபர், ஞானசூரியன் ஆ...

விஜயபுரம்,

சுயம்பிரகாசத்துணை.

ஸம்ஷால் மஹறிபா என்னும்

ஞானசூரியன்.

இது ஒரு இனிய நிகரில்லாத மாதப் பத்திரிகை.

தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. (தமிழ் வேதம்)

(All Rights Reserved.)

மலர் 2.] | உருத்திரோற்காரிஹூ புரட்டாசிமீ, ஐப்பசிமீ 1௳. | [இதழ் 6, 7.

கடவுள் வணக்கம்.

தேனெனத் தமிழ்சொல் கருணையானந்த
தேசிக வுட்சிதா காய
ஞானசூ ரியன்வந் துதித்தொளி விரிப்ப
நானிலத் துதித்தமா னிடர்கள்
நானெனு மகந்தைக் காரிருட் படலம்
நலிந்தவ ருளமலர் விரியச்
சோனைபோ லருள்செய் சுயம்பிர காசச்
சோதியைப் போதெலாந் தொழுவாம்.

(பத்திரிகாசிரியர்.)

உரையால் நினைவால் அருள்நோக்கால் உலக ருணர்வைப் பிணித்தமல
இருளா னதனை அறமாற்ற எழுந்த ஞான சூரியனே. (பிரபுலிங்கலீலை)

பந்தமறு மெய்ஞ்ஞான மான மோனப்
பண்பொன்றை யருளியந்தப் பண்புக் கேதான்
சிந்தையில்லை நானென்னும் பான்மை யில்லை
தேசமில்லை காலமில்லை திக்கு மில்லை
தொந்தமில்லை நீக்கமில்லை பிரிவு மில்லை
சொல்லுமில்லை யிராப்பகலாந் தோற்ற மில்லை
யந்தமில்லை யாதியில்லை நடுவு மில்லை
யகமுமில்லை புறமுமில்லை யனைத்து மில்லை.

(தாயுமான வள்ளல்.)

ஞானசூரியன்

இது ஒரு நிகரில்லாத மாத சஞ்சிகை.

சீவன்முத்தர்களிலக்கணம்.

(77-ம் பக்கத் தொடர்ச்சி.)

பள்ளிக்கூடத்தில் முதற்பாட புத்தகம் வாசிக்கும் பிள்ளை கள், ஏற்கனவே முதற்பாடமும் இரண்டாம்பாடமும் மூன்ற பாடமும் வாசித்து இப்போது நான்காம்பாட புத்தகம் வாசிப வனை நோக்கி, 'நீ ஒன்றுந் தெரியாத பேயனுயிருக்கிறுய்; எங்க ளைப்போல் முதற்பாட புத்தகத்தை வாசிக்காமல் எங்களுக்குப் பிரயோசனமாகாத ஏதோ ஒரு புத்தகத்தை வாசிக்கிறுயே; இனிமேல் அதை விட்டுவிட்டு எங்கள் வகுப்பில் வந்திருந்து முதற்பாட புத்தகத்தைப் படிக்காவிட்டால் நாங்கள் நிந்திப் போம்.' என்று இகழ்ந்ததுபோல்; சரியையும் சமயமுமாகிய முதற்படியிலிருப்பவர்கள், முதற்படியாகிய சரியையும், இரண் டாம்படியாகிய கிரியையும், மூன்ரும்படியாகிய யோகத்தையும் இதற்கு முறையே முஹம்மதியர்களில் சரீகத்து, தரீக்கத்து, ஹக்கீக்கத்து என்பதைக் கடந்து மஹரிபத்தென்னும் ஞான வீட்டிலிருக்கும் சமயாதீதராகிய ஞானிகள் நடையைப்பார்த்து, முதற்படியிலிருந்து தூங்கி விழுந்துகொண்டிருக்கிற சமயத்தி னர்கள், நாம் கெட்டுப்போவதுபோல் பிறருங் கெட்டுப்போக வேண்டுமென்று நினைக்கும் வாலிழந்த நரியைப்போல் எண்ணி ஞானிகளைப் பார்த்து ஆசார மில்லாதவனென்றும் தொழுகாதவ னென்றும் வணங்காதவனென்றும் பற்பல விதமாக வாய்க்கு

வந்தபடி பயித்தியம் பிடித்தவர்களைப்போல் பிதற்றுவார்கள். இவர்களிவ்வாறு பிதற்றிக்கொண்டிருக்க விவேகிகள் அறிந்துணர்ந்து போற்றிப் புகழ்ந்து வணங்குவார்கள். உலக நடைக்கும் ஞானிகள் நடைக்கும் இவ்வளவு ஏற்றந்தாழ்வு இருப்பதனாலேயே உலகத்தார்கள் பொய்யை மெய்யென்று கருதித் தான் கெட்டுப்போவது மன்றிப் பிறருந் தன்னைப்போல் கெட்டுப் போகவில்லையே யென்று நினைந்து மகான்களை நிந்திக்கும் மதப் பேயர்களைப்பார்த்து இவ்வுலகத்தில் இப்படியும் நிர்மூடர்களிருக்கிறார்களே இவர்களுக்கு எந்தக்காலம் உண்மை விளங்கப்போகிறதென்று ஞானிகள் இகழ்ச்சியாய்ச் சிரிப்பார்கள்.

தாயுமானவள்ளல்.

"பாலரொடு பேயர்பித்தர் பான்மையென நிற்பதுவே
சீலமிகு ஞானியர்தஞ் செய்கை பராபரமே." எனவும்

துணங்குடிவள்ளல்.

"வேசைய ராசையை வேரோ டறுக்கவும்
வெற்றிக் கொடிகட்டி மீசை முறுக்கவும்
பேசறி யாவூமர் போல்நா னிருக்கவும்
பேயரைப் போலும் பிதற்றிச் சிரிக்கவும்." எனவும்

திருவிளையாடற்புராணம்.

ஒழித்த நோன்பினர் ஆடலர் பாடலர் உலகம்
பழித்த செய்கையர் அழுகையர் நகையினர் பாசம்
கழித்த கண்ணின லரனுருக் கண்டுகொண் டுலகில்
விழித்த கண்குரு டாத்திரி வீரரும் பலரால்.

எனவும் திருவாய்மலர்ந்தருளி யிருந்கிறார்கள்.

ஓர் மடமங்கையானவள் தனது கரவு புருடனைச் சையோகித்து மதனசுகத்தை யடைந்தபின் அவள் மனமானது, வீட்டிலுள்ள பல தொழில்களைச் செய்துகொண்டிருக்கும்போதும் அந்த இன்பத்தையே ஆர்வத்துடன் நினைந்து நினைந்து, சிந்தித்துக் கொண்டிருப்பாள். அதுபோல் சீவன் முத்தர்களாகிய முமூட்சுக்கள் உலகவியாபாரத்திற் கலந்து விவகாரம் பேசிக் கொண்டிருந்தாலும்.

பிரபுலிங்கலீலை.

ஆடுநர் தம்முட ஞடு நல்லிசை
பாடுநர் தம்முடன் பாடு மென்மலர்
சூடுநர் தம்முடன் சூடும் வாள்விதிர்த்
தோடுநர் தம்முட ேனாடு மல்லமன்.

என்று கூறியதுபோல் சங்கீதம் பாடிக்கொண்டிருந்தாலும், ஆடையாபரண அலங்கிருதராய்ப் பரிமள களப கஸ்தூரிகள் திமிர்ந்து, குதிரை முதலிய வாகனங்களில் ஆரோகணித்தும், பொற்சிவிகை முதலிய வாகனங்களில் ஊர்ந்தும் விநோதங்கள் புரிந்தாலும், வேறு எவ்விதக் கிருத்தியங்களைப் புரிந்தாலும் அவ்வமயங்களினும் தனது எதார்த்த சொரூபத்தில் மனத்தை செலுத்திக் கொண்டிருப்பார்கள்.

சோரநாயகனைக் கூடிப் புணர்ந்தனுபவித்த சுகமானது, அங்ஙனம் புணர்ந்தவளுக்கே தெரியுமன்றி ஏனைய மகளிர்களுக்குத் தெரியாது. அதுபோல் சீவன் முத்தர்கள் எத்தொழிலைச் செய்துகொண்டிருந்தாலும் அவர்களது சமாதிநிலை கெடாது என்பது அவ்வித அனுபவிகட்கே தெரியுமன்றி மற்றவர்கள் அறிந்துகொள்வது மிக்க அருமை. ஏனென்றால், ‘கிணற்றுத் தவளை நாட்டு வளப்பம் அறியாது’ என்பதுபோல் மாயாந்தகாரத்தில் மூழ்கிக் கிடப்பவர்கட்கு ஞானிகளின் நடை ஒருபோதும் தெரியாது.

தாயுமானவள்ளல்.

"பெற்றவட்கே தெரியுமந்த வருத்தம் பிள்ளை
பெருப்பேதை யறிவாளோ."

விஞ்ஞானசாரம்.

மருளை யுடைய பித்தனையும் மருளில் லாத சுத்தனையும்
மருளை யிலரே துணிவாக மதிக்கு மதுபோ லீதன்றே
தெருளை யுடைய ஞானியையும் தெருளில் லாவஞ் ஞானியையும்
தெருளை யுடையோ ரேதுணிவாய்த் தேறு மவர்சொல் நடையிலுமே.

பட்டினத்தடிகள்.

எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனமிருக்கு மோனத்தே—வித்தகமாய்க்
காதிவிளை யாடியிரு கைவீசி வந்தாலுந்
தாதிமன நீர்க்குடத்தே தான்.

சிவஞானவள்ளல்.

அரியணையி லிருந்துலக வரசாட்சி புரிந்தாலும்
அங்கை யேற்றுத்
தெருவுதொறுந் திரிந்திரந்து தின்றாலு மிளம்பருவத்
தெரிவை மாரைப்
பிரியாம லிருந்தாலும் பிரிந்துதவம் புரிந்தாலும்
பேசிற் றெல்லாம்
விரிசீவன் முத்தனுக்கிங் குடன்பாடே யன்றியொன்றும்
விரோத மின்றே.

மரமானது குளக்கரையின்மேல் (ஆகாயத்தை) நோக்கி நின்றுகொண்டிருக்க அம்மரத்தின் நிழலானது தண்ணீரில் கீழ் முகமாகத் தோற்றுகின்றது. அதுபோல், இல்லற ஞானிகள் குடும்பத்தி லிருந்தாலும் சதா காலமும் மெய்ப்பொருளாகிய பிரம்ம நிலையையே சிந்தித்துக் கொண்டிருப்பார்கள். அதை யறியாத சில பிரபஞ்சத்தவர்களுக்கு தனது அந்தக்கரணங்கள் பரிசுத்தமின்மை பற்றி ஆவரணசத்தி மறைப்பதால், அவர்கள் குடும்பக்காரரைப் போலவே தோற்றும். ஆகையால் இரத்தி னப்பரீட்சை அறியாத ஒருவன் வயிர மணியைக் கூழாங்கல் லென்று நினைத்துக்கொண்டால் அது வயிரத்துடைய குற்றமா குமா? அதுபோல் மகான்களுடைய இலக்கணங்களைச் சவிஸ்தார மாகச் சொல்லும் நூற்களையும், சாதுசங்கத்தையும் ஒருகாலத்தி லாவது பார்த்தறியாதவன், இல்லற ஞானிகளைச் சாதாரண இல் லறத்தானென்று நினைத்துக்கொண்டால் அது மகான்களுடைய குற்றமாகுமா?

பிரபுலிங்கலீலை.

யாக்கை தாமென் றிருந்தழி கின்றவர்
ஊக்கிலா வறி வாகி யுடம்பொடு

தாக்கி லாதவர் தம்மையுந் தாமென
நோக்கு வாரவ ருண்மையை நோக்குறுர்.

கூத்த ருடகக் கோல நடிப்பினைப்
பார்த்து வாய்மையென் றெண்ணிலர் பாருளார்
ஏத்து ஞானிதன் யாக்கை நடிப்பினை
யோர்த்து மாதவ ருண்மையென் றுன்னுரூர்.

வீணை, பிடில், ஹார்மோனியம் முதலான வாத்திய (இசை)க் கருவிகள் தன்னை இயக்குவோன் இய(வாசி)க்கும்போது பாடக னுடைய பாட்டுக்குத் தக்கபடி பேசிவிட்டு, வாசிப்பதற்கு முன் னும் வாசித்த பின்னும் பேசாமலிருக்கும். அதுபோல், இல்லற ஞானிகள் தமது காரியக்காரர்கள் வந்து ஏதாவது காரியங்களைப் பற்றிப் பேசும்போது மாத்திரம் அகாரணமின்றிக் காரியமாகப் பேசிவிட்டு இதர சமயங்களில் தனது நிலையிலிருந்து நீங்காமல் மௌனமாக இருப்பார்கள்.

ஆகாயம் (வெளி) எல்லாப் பொருள்களுக்கும் இடங்கொ டுத்து நின்றும் தான்மாத்திரம் அவற்ருேடு தாக்கற்று நிற்கும். அதுபோல் குடும்ப ஞானியானவர் குடும்பத்திற்குத் தான் பிர தானமாயிருந்தும் சதாகாலமும் சேற்றிலே வசிக்கிற பிள்ளைப் பூச்சி சேற்றூடிருந்தும் சேருேட்டாதிருப்பதுபோல் குடும்ப பாரத்தில் தாக்கற்றிருப்பார்.

(இன்னும் வரும்) மணிமுத்து நாயகம்.

காதலே கனவு.

நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா இறசூல் சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களும் மற்ற வியாபாரிகளும் ஷாம் தேசத்தை விட்டுப் புறப்பட்டு ஊசா என்பவன் மாளிகையையும் கடந்து வகைவகையான மல்லிகை முல்லை இருவாட்சி சண்பகம் மனோரஞ்சிதம்முதலிய அரும்புகள் முறுக்கவிழ்ந்து பிரகாசியா நிற்கும் புட்பங்கள் நிறைந்த நந்தவனங்களையும்,

சந்தகில் திலகங் குரவுதேக் காரம்
தான்றிகொங் கேழிலம் பாலே
சிந்தூர மசோகு மாதவி கெல்லி
செண்பகம் பாடலந் தேமா
மந்தரை கமுகு புன்னைநா ரத்தை
மகிழ்விளா மருதெலு மிச்சை
குந்தமா சினிமா கடம்பில விதழி
குங்குமம் ... ...

என்று சொல்லப்படாநின்ற எண்ணிறந்த மரங்களடர்ந்த பசிய சோலைகளையும் இன்னும் பலவிதப் புராணங்களிற் சொல்லி யிருக்காநின்ற வளங்களுக்கும் மேலானதான பலபல வளங்களை யும் தாண்டிச்சென்று அதன்பின் இருள்சூழ்ந்த ஒரு சோலை யைக்கண்டு மகிழ்ந்து அந்த மனோகரமான விடத்தில் தங்கள் வாகனங்களை விட்டிறங்கி இளைப்பாறித் தங்கி யிருந்தார்கள் அவர்கள் அவ்வாறிருக்க,

கதீஜாநாயகம் கனவுகண்டது.

தேவர்களான மலாயிக்கத்துமார்கள் நபிநாயகம் அவர்க ளுக்கு குங்குமப் புஷ்பத்தினாலாய மலர்மாலைகளையும் இரத்தின பரணங்களையும் தரித்து அழகிய ஒரு ஒட்டகத்திலேற்றி நானு வித வாத்தியகோஷம் கடல்போல் முழங்கும்படியாகவும், கொடி களின் கூட்டங்கள் அசையவும் ஆயுதங்கள் பளபளவென்று பிர காசிக்கவும் வெண்சாமரங்கள் சுழற்றவும் சந்திரவட்டக் குடை நிழலைச்செய்யவும் யானைக்கூட்டங்கள் நெருங்கவும் விதம்வித மான புஷ்பப்பல்லக்குகள் பெருகவும் தேவமகளிரான கூறுல் ஹீன்கள் இருபுறத்திலும் சோபனஞ் சொல்லிக்கொண்டு செறிய வும் குதிரைக்கூட்டங்கள் பின்பற்றவும் தேவர்கள் புஷ்பமாரி பொழியவும் நாயகம் அவர்கள் வீதியின்கண் பவனி விலாசம் வரவும் அவர்கள் திருவடியில்விழுந்து வணங்கவும் இவ்விதமான ஒரு அற்புதக் கனவை கதீஜாநாயகம் அவர்கள் கண்டு விழித்து தாங்கள் நித்திரைசெய்த புஷ்பசயனத்தை விட்டெழுந்து அந் தக்கனவை நனவாக எண்ணி வாசலில் வந்துநின்று தெருவீதி

யைப் பார்த்து, அவ்விதமான கோலாகலங்களில் ஒன்றையுங் காணாமல் திகைத்து,

திருக்குறள்.

நனவினால் நல்காக் கொடியார் கனவினால்
என்னெம்மைப் பீழிப் பது.

கருத்து:—ஒருநாளாவது (நனவில்) நேரில் வந்து அருள்செய்யாத எனது தலைவராகிய கொடியவர் நாள்தோறும் கனவின்கண் வந்து என்ன காரணத்தினால் என்னைத் துன்புறச் செய்கின்றார். (என்பதாம்.)

என்று கூறிவருந்தி அதுமுதல் ஆபரணங்களைத் தரிக்காமலும் கூந்தலை முடிக்காமலும் சந்தனத்தையும் சுண்ணச்சாந்தையும் பூசாமலும் வளையல் பூணாமலும் மேகலாபரணத்தை இறுக்காமலும் புஷ்பங்களைச் சொருகாமலும் கண்களுக்கு அஞ்சனமெழுதாமலும் பந்து கழங்கு அம்மானை முதலானவைகளை ஏந்தாமலும் பாதங்களுக்குச் செம்பஞ்செழுதாமலும் பஞ்சணையிற் பொருந்தாமலும் நித்திரை செய்யாமலும் இருந்தனர். அன்றியும் கிளிகளுக்கும் செங்காலன்னங்களுக்கும் ஊட்டுவதையொழித்தனர். அன்னத்தை வெறுத்தனர் தோழிப்பெண்களோடு சேர்ந்துலாவுவதை நிறுத்தினர். வீணை, பிடில் முதலியவற்றினின்றெழும் இனிய கானங்களைச் செவிமடுத்திலர் பரிமள மிகுந்த நீராடிலர் சுகந்த புஷ்பங்களெல்லாம் அவர்களுக்கு துன்பத்தைத் தந்தது. குயிலினது குரலும் தென்றற்காற்றும் பூரணச்சந்திரனும் அவர்களுக்கு மாறாத்துயர் செய்ததென்றால் அவர்கள்கதியை அதிகமாகச் சொல்லவும் வேண்டுமோ? (சுருக்கமாகச் சொல்லுமிடத்தில்) தேகமெலிந்து கன்னங்குழிந்து கண்ணொளி மழுங்கி உரைதடுமாறி எவ்வித உள்ளக்களிப்பு மில்லாமல் துன்பக்கடலுள் அடிக்கடி அமிழ்ந்து அமிழ்ந்து நபிநாயகம் அவர்களைத் தியானித்த வண்ணமாகவே யிருந்தார்கள்.

திருக்குறள்.

காதலர் தூதொடு வந்த கனவினுக்
கியாதுசெய் வேன்கொல் விருந்து.

கருத்து:—(யான் வருந்துவதை யறிந்து அது தீரும்படி) எனது தலைவருடைய தூதைக்கொண்டு என்னிடம் வந்த கனவுக்கு யான் விருந்தாக யாதினைச் செய்வேன். (என்பதாம்,)

நாம் இவ்வாறு காதலால் துன்புறுவதைக் கண்ட இவ் வூரார்கள் வேற்றுமைப் படும்படியாக ஏதேனுஞ் சொல்வார்களோ? என்னை நபிகணுயகம் அவர்களின் மனையாளாகும்படி எனது பிரார்த்துவம் பொருந்தச் செய்யுமோ? அல்லது விலகச் செய்யுமோ? யாதொரு நிச்சயமும் தெரியவில்லையே? நமது மடியில் பூரணச்சந்திரன் தவழ்ந்ததாகக் கண்ட கனவும் அதற்கு உறக்கத்து என்னும் வேதபண்டிதனைவன் நபிநாயகம் அவர்களுக்கும் உமக்கும் நடக்கப்போகும் விவாகத்தைக் குறித்தது என்று முன் கூறிய வார்த்தைகளும், நபிகள் பெருமான் அவர்கள் மணப்பவனியின் சொப்பனமும் பொய்யாய்ப் போகுமா? நாம் ஆதியிற் கண்ட சொப்பனத்தை மைசறு என்பவன் மூலமாக ஊசா என்னும் பண்டிதனுக்குச் சொல்லியனுப்பினோம். அதற்கு அந்தப் பண்டிதன் சொன்ன பதில் யாதோ? மைசறு என்பவன் கடிதம் இதுபரியந்தம் வரவுங்காணேமே? என்று எண்ணி ஏக்கங்கொண்டு உடல்வருந்தி நெடுமூச்சுவிட்டு அம்ம! ஓ!! என்று புலம்பி வாடினார்கள்.

நபிகள் நாயகமே! இந்த மக்கமாநகரத்திலுள்ள அழகின் மிக்க மடமாதர்களெல்லாம் தங்களை மணம்புரிய வேண்டிப் பலவித நோன்புக ளியற்றிக்கொண்டிருக்க, அவர்களை ஒரு பொருளாக எண்ணுமல் என்னையணுகி எனது உள்ளத்திலுறைந்து காதல்நெருப்பை மூட்டிக் கவலையுறச் செய்தீர்கள். அது முதல் நான் படும்பாடு உலகத்தில் பஞ்சு தானும் படாது.

> கான்படு கண்ணியில் மான்படுமாறு கலங்குகின்றேன்
> என்படு கின்றனை என்றிரங்காயெனி லென்செய்வனே.

என்று புலம்பி நாயகமே! யான் இவ்வாறு கவலைப்படுவதை அறிந்து என்மீது காதலுடையவர்களா யிருப்பீர்களோ? அல்லது பாராமுகமாயிருப்பீர்களோ? பாராமுகமாக யிருந்துவிட்டால்

யான் எவ்வாறு உயிர்தரிப்பேன்? எங்கே பார்த்தாலும் தேவரீருடைய சுந்தர சொரூபமானது உருவெளித்தோற்றமாகி என் அறிவை மழுங்கச் செய்கின்றதே? அன்புடைய மாதர்களை இவ்வண்ணம் கலங்கச்செய்வது நீதியோ? இது தகுமோ? இது முறையோ? இது தருமந்தானோ? நாயகமே! பலவிதமாகப் புலம்புவதிற் பயனென்னை! தாங்கள் கூடிய சீக்கிரத்தில் வந்து முகதெரிசனங் கொடுக்காவிட்டால் என்னுயிரை ஒருபொருளாக மதித்து உயிர்வைத்து வாழேன். இது சத்தியம்! சத்தியம்!! என்று பிரலாபித்தார்கள்.

தாயுமானவள்ளல்.

அன்பின்வழி யறியாத என்னைத் தொடர்ந்தென்னை
அறியாத பக்கு வத்தே
ஆசைப் பெருக்கைப் பெருக்கிக் கொடுத்துநான்
அற்றேன் அலந்தே னென
என்புலன் மயங்கவே பித்தேற்றி விட்டாய்
இரங்கியொரு வழியா யினும்
இன்பவெள மாகவந் துள்ளங் களிக்கவே
எனைநீ கலந்த துண்டோ?
தன்பருவ மலருக்கு மணமுண்டு வண்டுண்டு
தண்முகை தனக்கு முண்டோ?
தமியனேற் கிவ்வணந் திருவுள மிரங்காத
தன்மையால் தனி யிருந்து
துன்பமுறின் எங்ஙனே அழியாத நின்னன்பர்
சுகம்வந்து வாய்க்கும் உரையாய்?
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுக வாரியே.

என்று அன்பானந்தப் பாசுரங்களைச் சமயத்திற்குத் தக்கபடி பாடிச் சோகமடைந்து சமுத்திரத்தைப் போன்ற காமவெள்ளத்தை மனத்தினுள் அமையச்செய்து இக்காம சமுத்திரத்தை எவ்வாறு தாண்டுவேன் என்று விசனமுற்றுத் துன்பமடைந்தார்கள்.

திருக்குறள்.

நனவினா னல்கா தவரைக் கனவினாற்
காண்டலி னுண்டென் னுயிர்.

கருத்து:—நனவில் வந்து அருள்செய்யாத எனது நாயகர் கனவில் வந்து தெரிசனங் கொடுப்பதால் என்னுயிர் நீங்காமலிருக்கின்றது. (என்பதாம்.)

இவ்விதமாக இருந்து வாடும் சமயத்தில் தமது ஊழியனாகிய மைசரு என்பவன் தீட்டியனுப்பிய நிருபம் ஒன்று வந்ததெனக் கேள்விப்பட்டு ஆசையோடும் விரைவாக ஓடிப்போய் வாங்கி முத்திரையை நீக்கிப் பார்க்க அதிற் குறிப்பித்ததை வாசித்து மனமகிழ்ந்து "நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம்" என்றெழுதா நிற்கும் அழகிய ஒவ்வொரு வரிகளிலும் இரண்டு கண்களையும் வைத்து முத்தமிட்டுத் தங்கள் இழந்த பிராணனைத் திரும்பப் பெற்றுக்கொண்டதைப்போல் ஆனந்த சாகரத்தில் மூழ்கிய பின்னர் அக்காகிதத்தை நாயகம் அவர்கள் பெரிய தந்தையாகிய அபீத்தாலிபு அவர்களுக்கு அனுப்பிவைத்தார்கள். அவர்கள் வாங்கிப்பார்த்து அளவில்லாத பேருவகை பூத்தார்கள்.

(இன்னும் வரும்.) பத்திராதிபர்.

பிள்ளைகளை வளர்த்தல்.

உலகத்தில் இல்லறம்புரிவோர் அடையவேண்டிய பாக்கியங்கள் எல்லாவற்றிலும் புத்திரபாக்கியமே மிகவும் முக்கியமானது. புத்திரப்பேறில்லாத வாழ்க்கையானது கண்ணில்லாத யாக்கையையும் சந்திரனில்லாத வானத்தையும், மதிமந்திரியில்லா அரசாக்ஷியையும், கருணையற்ற கல்மனதையும், புலவர்களில்லாத சபையையும் ஒக்கும். புத்திரப்பேறில்லார் முத்தியடையார் என்பது சான்றோர் துணிபு. ஆகவே முற்காலத்தில் அனேக மன்னர்களும் செல்வவான்களும் எல்லாபாக்கியங்களும் உற்றும் புத்திரபாக்கிய மில்லையேயென்ற பெருமனக்குறைவால் தமது சௌகரியங்களை யெல்லாம் விடுத்து கானகம்சென்று தவம் உஞற்றுவாராயினர் என புராணங்கள் கதைகள் வாயிலாக அறி

றேம். தற்காலத்திலும் புத்திரபாக்கியம் இல்லாக் குறைவால் மனோவியாதியுற்று தானதருமங்கள் செய்வோர் பலர். ஆதலின் புத்திரப்பேறனது இல்லறம்புரிவார் எல்லோரானும் பெரிதும் விழையப்படுவதொன்றும். ஆகவே புத்திரபாக்கியம் கிடைக்கப் பெற்றும் அப்புத்திரர்களால் அடையவேண்டிய பலனை யடைவதற்கான வழியில் அப்புத்திரர்களைப் பழக்காமல் விட்டுவிட்டால் அவ்வரிய புத்திரப்பேற்றால் பயனின்றி முடியுமல்லவா?

சந்ததிகள் நற்குண முடையவராவதும் துற்குணமுடையவர்களாவதும் தாய் தந்தையரது குணகுணங்களையும், நடத்தையையும், அவர்கள் வளர்க்கப்படும் வழியையும் பொறுத்ததாகும். சில குழந்தைகள் தமது பெற்றோர் சற்குண சம்பன்னராயிருந்தும், நல்வழியில் வளர்ப்பதற்குப் பலவாறு முயன்றும் மாறாகவேயிருக்கிறார்கள். அது பெற்றோரது கன்மத்தொடர்பேயாகும்.

நாலடியார்.

செந்நெல்லா லாய செழுமுளை மற்றுமச்
செந்நெல்லே யாகி விளைதலால்—அந்நெல்
வயனிறையக் காய்க்கும் வளவய லூர!
மகனறிவு தந்தை யறிவு.

என்றபடி குழந்தைகள் தமது பெற்றோர்களது குணங்களைப் பெரும்பாலும் பெற்று விளங்குவ என்பது சகஜம். ஆதலால் போககாலங்களில் ஆடவர்மகளிர் பூரண அன்புடையவர்களாகவும், மனவியாகூல மில்லாதவர்களாகவும் இருக்கவேண்டும். தாய்மார்கள் சூல்காலத்தில் பெரியோர்களது சரித்திரங்களைக் கேட்பதிலும், புண்ணிய புராணங்களைக் கேட்பதிலும் பிரியமுள்ளவர்களாகவும், பொய், கபடம், பொறாமை ஆகிய தீக்குணங்களால் இழிவான செய்கைகளைச் செய்யாதவர்களாகவும் ஒழுகவேண்டும். இவ்வாறு நடந்துகொள்வதால் குழந்தைகளும் நல்ல சுபாவமுடையவர்களா யிருப்பார்கள்.

அவ்வாறு நல்லியல்போடும் குழந்தைகள் பிறந்துவிட்டால் மாத்திரம் போதுமா? நல்ல நிலத்தில் நல்ல விதையை விதைத்து நல்ல செடியும் முளைத்துவிட்டது. முளைத்து விட்டதனாலேயே எல்லாவித பயனும் அடைந்ததாக ஆகுமா? அதற்கு சரியான காலத்தில் நீர் வார்த்து, களைகொய்து, பூமியைக்கெல்லி எரு போட்டாலல்லவோ செடிவளர்ந்து எதிர்பார்த்த பயனை அளிக்கும். ஆதலால் குழந்தைகளை இளம்பருவமுதலே நல்வழியில் பழக்கவேண்டும். சிறுவர்கள் மனது களங்கமற்றது. எந்த விஷயத்தையும் எளிதிலும் சீக்கிரத்திலும் கிரகித்துக்கொள்ளும் இயல்புடையது. பிள்ளை ஆகையால் குழந்தைகள் என்ன விஷமம் செய்தாலும் தாய் தந்தையர் கவனிக்காமல் விடுவதால் தீய செயல்களே அக்குழந்தைகளது பழக்கமாய் விடுகிறது. தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும். ஆகையால் இளம்பருவத்தில் ஏற்படும் குணங்களானவை பின்பு சுலபத்தில் நீங்குவதில்லை.

பிள்ளைகளை நல்வழியில் பழக்கி நல்ல குணங்களைப் புகட்டுவதே பெற்றோர்களது முக்கிய கடமையாகும். 'மைந்தர்தமை நெஞ்சில்' என்றபடி குழந்தைகள் ஆசை மனதில் இருக்கவேண்டும். அஃதன்றி குழந்தைகள் விஷமம் செய்யும்பொழுதெல்லாம் கண்டிக்காமல் அவர்கள் போக்கிலேயே விட்டுவிடுவதால் அது இவர்களுக்கே தீங்கிழைக்கத்தக்கது. இளமையில் உள்ளதுதானே முதுமையில் என்று நினைக்காத சில பெற்றோர்கள் குழந்தைகளிடத்தில் 'தம்பி! அண்ணனை படவா என்று சொல்லு! அப்பாவை உதை! என்று இவ்விதமான நல்ல உபதேசங்களையும் பழக்கங்களையும் வெகு சிரத்தையோடும் இளமையிலேயே புகட்டி வைக்கிறார்கள். பின்பு விளையும் பயனறியாத பேதைத் தாய்மார்கள்தான் இப்படியெனில் சில தந்தையர்களும் இவ்வாறு குழந்தைகள் விஷமம் செய்வதைக்கண்டு ஆனந்திக்கிறார்கள். இந்த அறிவின்மையின் காரியமாக இவர்கள் பிற்காலத்தில் வருத்தமடைவார்கள் என்பது திண்ணம். எல்லாம் அததற்கு வயது வந்தால் சகல புத்திமதிகளும் வந்துவிடும்

என்கிறார்கள். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? அழுக்குப் பிடியாத வஸ்திரத்தில் சாயம் உறுதியாய்ப் பிடிப்பது போலவே சிறுவர்களது களங்கமற்ற மனதில் அவ்வித தீயபழக்கங்கள் எல்லாம் உறுதியாய்ப் படிந்துவிடும். குழந்தைகளது விஷமச் செய்கைகளை அப்பொழுதே கண்டியாது விடுதல் நகத்தால் கிள்ளி எறியக்கூடிய காலத்தில் ஒருசெடியை விட்டுவிட்டு, பிறகு கோடாரிகொண்டு வெட்டுவதுபோலாகும். தாய் தந்தையர்களே குழந்தைகளுக்குத் துற்போதகராயிருந்தும் அவர்கள் பிற்காலத்தில் தமக்குப் பலவிதத்திலும் தொந்தரவு கொடுப்பதால் வருத்தப்படுவதில் என்ன பயன்?

இன்னும் நம்நாட்டுத் தாய்தந்தையர் ஒன்றுமறியாத இளம் பருவத்திலே குழந்தைகள் அலறும்படியாக பசாசுவருகிறதென்றும் பேய்வருகிறதென்றும் பயமுறுத்தியும், அவர்களுக்கு பேய் பசாசுகள் செய்கைகள் சம்பந்தப்பட்ட கட்டுக்கதைகளையும் சொல்லுகிறார்கள். இதனால் சிறுவர்களது குழந்தைப் பருவத்திலேயே அச்சம் என்னும் விதை விதைக்கப்பட்டு, பிர்மாண்ட விருக்ஷமாகிப் பூத்துக் காய்த்துவிடுகிறது. அவர்கள் தமது முதிர்ந்த வயதில் எவ்வளவு வீர சூரர்களாயிருந்தாலும் இராக்காலங்களில் வெளியேபோக அஞ்சுகிறார்கள். இருளில் சிறு செடி கொடிகளைக்கண்டாலும் பேய் பசாசென்று வெருண்டு, அறிவு கலங்கி மனப்பீதியுற்று அதனாலேயே சுரமுதலிய வியாதிகளுக் காளாகிறார்கள். ஆகையால் சிறுவர்களுக்குப் பேய் பிசாசு கதைகளைச் சொல்லாமல், நற்குண நல்லொழுக்கம், வீரத் தன்மை ஆதிய நிறைந்த புராணங்களையும் கதைகளையும் சொல்ல வேண்டும்.

மக்களை நல்வழியில் பழக்கி நற்குண நல்லொழுக்கமுள்ளவர்களாகச் செய்வதே தாய்தந்தையர் அவர்களுக்குச் செய்ய வேண்டிய பேருபகாரமாகும். இதுபற்றியே,

> 'தந்தை மகற்காற்று முதவி யவையத்துள்
> முந்தி யிருப்பச் செயல்.'

என்றார் உத்தரவேத முடையார். அன்றி அவர்களது அறிவைச் சிறிதும் விருத்திசெய்யாது விடுத்து எவ்வளவு திரவியத்தைச் சேர்த்துவைத்துப் போயில்தான் என்ன! எல்லாம் பித்தன்கையில் வாளாயுதத்தைக் கொடுத்ததொக்கும்.

உலகில் மக்கட்பேறில்லா திருப்பது துர்ப்பாக்கியமே. ஆயினும்,

'அச்சமுள் ளடக்கி அறிவகத் தில்லாக்
கொச்சை மக்களைப் பெறுதலி னக்குடி
யெச்சமற் றேமாந் திருக்கை நன்றே.'

என்றபடி அறிவற்ற மக்களுடைமையினும் மக்கட் பேறின்றி யிருப்பதே மிகவும் நல்லது. புத்திரப் பேறில்லாதவர்களது துக்கமானது காலக்கிரமத்தில் சிறிது சிறிதாய்க் குறையும். ஆனால் அறிவில்லாத மக்களால் பெற்றோர்களுக்கு சதா மனோ சாஞ்சல்யம் ஏற்பட்டுக்கொண்டே யிருக்கும். அவ்வித அறிவில்லாத மக்கள் பல இருந்தாலும் பெற்றோர்க்கு என்ன பயன்? இவர்கள் தாம் கெடுவதுமன்றி தமது முன்னோர்களது புகழையும் கெடுக்கிறார்கள். ஏகபுத்திரனாயிருந்தாலும் அறிவுடையவனாயின் அவனே தன் தாய்தந்தையர்க்கு இன்பத்தைக் கொடுப்பவன்; அவனே தனது முன்னோர் புகழை நிலைநிறுத்துபவன்.

ஆதலால் தாய் தந்தையர்களே! நீங்களே உங்களது மக்களின் நன்னடத்தைக்கும் துர்நடத்தைக்கும் பொறுப்பாளிகள் உங்களது நல்ல உபதேசத்தாலும் உங்களுடைய பழக்க வழக்கத்தாலுமே உமது மக்களின் அறிவை விருத்திசெய்யவேண்டும். இளம்பிராய முதற்கொண்டே தெய்வபக்தி, பெரியோர்களிடத்தில் வணக்கம், பொய், களவு, சூது, பொறாமை முதலிய தீக்குணங்களின்மை; கீழோர் மேலோர் சகலரிடத்திலும் அன்பு, இவை முதலான நற்குணங்கள், போதனையாலும், அறிவு நூல்களைக் கற்பித்தலானும் உண்டாகும்படிச் செய்யவேண்டும். எல்லாம் வல்ல இறைவனருள்புரிவாராக!

ப. வீரப்பத்தஞ்சவராயன். கருவேலி.

திருமணப்பொருத்தம்.

(131-ம் பக்கத் தொடர்ச்சி)

கதீஜா நாயகம் அவர்களும் அபீத்தாலிபவர்களும் அவ்வாறு ஆனந்தக்கடலுள் மூழ்கிக்கொண்டிருக்க, நமது நபிநாயகம் அவர்களும் காளையர்களான ஏனைய வியாபாரிகளும் இன்றியமையாத அந்தப் பசிய சோலையிலிருந்து பிரயாணமாகி திருமக்கமாநகரம் வந்து சேர்ந்தார்கள். அதை அபீத்தாலிபவர்கள் கேள்வியுற்று எதிர்சென்று நாயகம் அவர்களைக்கண்டு அழைத்து வந்து உவகைச் சலதியுள் மூழ்கிக் கட்டியணைத்து முத்தமிட்டார்கள் நாயகம் அவர்களுக்குச் சொந்த மாதாவைப்போன்ற அபீத்தாலிபவர்கள் மனைவியரான பாத்திமா அவர்கள் நமது நாயகம் அவர்களைக்கண்டு இன்றுதான் எனது இருகண்களையும் பெற்றேனென்று ஆர்வங்கொண்டு கட்டியணைத்து முத்தமிட்டு ஓராசனத்தி லிருக்கச்செய்து ஆலாத்தியென்னும் நீராஞ்சனத்தினால் கண்திருஷ்டி தோஷம் கழித்துச் சுத்திசெய்தபின் நாயகம் அவர்களை மனைக்குள் பிரவேசிக்கச் செய்தார்கள். அபூபக்கர், அப்பாசு, ஆரிது, சுபைறு முதலிய வியாபாரிகளும் பஞ்சமாபாதகங்களுக் குறைவிடமான அபூஜகில் என்பவனும் தத்தம் மனையிற் போய்ச் சேர்ந்தார்கள். இவர்கள் இவ்வாறு செல்லாநிற்ப,

மைசரு என்பவன் தன்னுடனே கணக்கர்களும், ஏவற்காரர்களும் சூழ்ந்துவரக் கதீஜாநாயகம் அவர்கள் சமுகத்திற் சென்று அவர்கள் சீறடிகளில் வணங்கி நின்றான். அவனைக் கதீஜா நாயகம் அவர்கள் பார்த்து மைசருவே! நீங்கள் இங்கிருந்து பிரயாணப்பட்டுச் சென்ற விடங்களில் நடந்தவைகளை விபரமாகச் சொல்லென்று கூற அவன் கதீஜா அவர்களைப் பார்த்து பொற்கொடி போன்றவர்களே! இவ்வுலகத்தில் நமது நபிநாயகம் அவர்கள் காரணீகங்களை இவ்வளவு அவ்வளவு என்று வரையறுத்துச் சொல்ல எவராலும் இயலாதென்றால் அடியேனால் சொல்வது என்னை? யான் எழுதியனுப்பிய பாசுரமே அதற்குச் சான்று பகர்ந்து நிற்கும். அன்றியும் அவர்களால் செய்யமுடியாத காரணீகரமானது யாதொன்றுமேயில்லை என்று பற்பல விதமாக வியந்து சொன்னான்.

அவன் சொன்ன வார்த்தைகள் கதீஜாநாயகம் அவர்கள் சரீரத்தில் பசலை பூத்தெழும்பிய காமமாகிய கொடியானது, பற்றியேறுவதற்கு நாட்டிய செழிய கொம்பை நிகர்த்தும் காமமாகிய அக்கினியை அதிகரிக்கச் செய்யும் துருத்தியை நிகர்த்தும் இருந்தபடியால் நபிகணாயகம் அவர்கள்மீதுள்ள காதலினால் அதிகரித்த துன்பமென்னும் சமுத்திரத்தில் அமிழ்ந்து நீந்திக் கரையைப் பொருந்தமுடியாமல் நித்திரையின்றி வருந்தி இன்பமில்லாதபடி சிலநாட் கழிந்தபின்னர் நபிகணாயகம் அவர்கள் வடிவமானது கருத்திலும் கண்களிலும் அடிக்கடி உருவெளித் தோற்றமாய்த் தெரிய அதை யுண்மை வடிவமென்று நம்பி பின்னர் உருவெளித் தோற்றமென்று தெரிந்து வெட்கி பஞ்சணையின்மீது நெட்டுயிர்ப்பெறிந்து எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியெண்ணி நெஞ்சமது புண்ணாகி அயர்ந்து நித்திரை செய்கின்ற சமயத்தில் பின்வருமாறு கனவுகண்டார்கள்.

கதீஜா நாயகம் 2-வது கனவு.

ஒரு மரமானது வயிரம் என்னும் வேர்களையூன்றி, மாணிக்கம் என்னும் கிளைகளைவிட்டு மரகதம் என்னும் இளந்தளிர்களைப் பொருந்தி அந்த மக்கமா நகரத்தைப் போர்த்து மாதுரியமான கனிகளையுகுத்து செவந்த புஷ்பங்களைத் தங்கள் தலைமீது சொரிந்தது. ஆகாயலோகம் வரையில் வளர்ந்து நீட்சியுற்றதாகவும் அந்த மாணிக்கமரத்தின் அழகிய புட்பமானது வானம் பூமிமுதலிய எண்டிசைகளிலும் பரிமளிக்கக் கண்டு வனப்பிற் சிறந்த மடமாதர்களும் அறிவிற்சிறந்த ஆடவர்களும் போற்றிப் புகழும் வண்ணம் ஒரு இனிய கனவைக் கண்டார்கள்.

ஆச்சரியமான அக்கனவை கதீஜாநாயகம் அவர்கள் கண்டு விழித்தெழுந்து கலாவல்லவனான உறக்கத் என்பவனிடம் சொன்னார்கள். அதை அவன் கேட்டுத் தெளிந்து கதீஜாநாயகமே! தாங்கள் கண்ட வயிரவேரானது ஈமானுடைய நிலை; மாணிக்கமரமானது நபிகணாயகம்; அவர்கள் நல்ல பரிமளமானது தீனுல் இஸ்லாம் என்னும் மார்க்கத்தினது விளக்கம்; இனிய கனியானது வேத மகாமந்திரமாகிய கலிமா; வாழ்த்துதலானது தேவர்

கள் செயல்; புஷ்பமழை சிந்துதலானது நபிகள்பெருமான் அவர்களை நீர் விவாக முடித்துக்கொள்ளுதல் என்று சொல்லி அந்த வர்த்தமானங்களைக் குவைலிதென்பவனுக்கும் விபரமாகச் சொல்லிக் காட்டினான். அதைக் குவைலிது கேட்டு நபிசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்கு நமது மகள் மனையாளாகுவது நாம் செய்த புண்ணிய வசமோ? அல்லது நமது முன்னோர்கள் இளைத்த தவத்தின் பேறோ? என்று அகமகிழ்ந்திருந்தான்.

கதீஜாநாயகம் அவர்கள் மைசறுவை அழைத்து நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களுக்கு வயது 25-க்கு மேலாகியும் இதுவரையிலும் விவாகக் கோறிக்கை நடைபெறாதிருப்பது யாது காரணம்? என்றதற்கு, அம்மா! கோடி திரவியஞ் சம்பாதித்தவர்க்கும் கடவுளமைத்த அமைப்பையன்றி இன்பங்களை அநுபவிப்பது அரிது என்னும் பொருளையடக்கி,

வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது.

என்று முதற்பாவலர் கூறியிருப்பதே நமக்குப் போதிய சான்றாகும். அன்றியும்,

பேறிளமை யின்பம் பிணிமூப்புச் சாக்காடிவ்
வாறுங் கருவி லமைப்பு.

என்னும் ஆன்றோர் வசனம்போல் இச்சித்த பயன்களனைத்தும் ஊழ்விதியினாலன்றி வந்து பொருந்தாது என்று மைசறு கூறினான்.

கதீஜா நாயகம் அவர்கள் மன்மத பாணத்தால் வருந்துகின்ற துன்பத்தையும், அதற்குக் குவைலிது முதலியவர்கள் சம்மதித்து எப்போது விவாகம் நடைபெறப் போகிறதோ என எதிர்பார்த்திருப்பதையும் மைசறு நன்குணர்ந்து நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களிடஞ்சென்று கதீஜாநாயகம் அவர்கள் கண்ட கனவையும் அவர்கள் சிந்தையிற் குடிகொண்டிருக்கிற காதலின் பெருக்கத்தையும், உறக்கத் என்னும் பண்டிதன் சொன்ன கனவின் பொருளையும், குவைலிது மகிபரின் அந்தரங்க மகிழ்ச்சியையும் பிரித்து இரகசியமாகச் சொன்னான்.

மைசரு சொன்ன வார்த்தைகளை நாயகம் அவர்கள் கேட்டு ஒருநாளிலு முண்டாகாத பேருவகைக்கடலை மடுத்து அவ்விப ரங்களை அபீத்தாலிபு அவர்களுக்குத் தெரிவிப்பதற்காக மைசரு வையும் அழைத்துக் கொண்டுபோய்ச் சகல விபரங்களையும் ஆதி யோடந்தமாய் மைசரு மூலமாய்த் தெரிவித்தார்கள்.

மைசரு சொன்ன வார்த்தைகளை அபீத்தாலிபு அவர்கள் கேட்டுப் புளகாங்கிதங்கொண்டு அவனுக்கு வேண்டிய உபசாரங் கள் செய்தனுப்பிய பின்னர் அப்பாசு, ஆரிது, ஹம்சா இறுதி யாகவுள்ள தமது சகோதரர்களனைவர்களையும் கூப்பிட்டு நடந்த வர்த்தமானங்களைச் சொன்னார்கள்.

அப்பாசு முதலியவர்கள் கேட்டு உள்ளங்களித்து இளமயி லாகிய கதீஜா அவர்களைத் திரண்ட செல்வத்தினாலும் கௌரவத் தினாலும் குடித்தனப் பெருமையினாலும் குலத்தின் மேன்மையி னாலும் தெய்வ வழிபாடு முதலிய நன்னடக்கை மிகுதியினாலும் தெய்வப்பெண்களை நிகர்த்த வனப்பினாலும் விவாக முடிப்பதற்கு அரசர்களெல்லாம் நாவுநீட்டிக் கேட்க அச்சமுற்றிருந்தார்கள். அது காரணத்தால் நாமும் கேட்பதற்கு ஐயமுற்றிருந்தோம் அவர்களே வலிய விரும்புகையில் நாம் சந்தேகப்பட வேண்டிய தில்லை. விவாகப்பொருத்தம் பேசுவதற்குத் தகுதியான தூதை முன்னதாக அனுப்பிவைப்பதே சரியானது என்றார்கள். அதற்கு அபீத்தாலிபு அவர்கள் வாக்கு வல்லபமுடைய தமது சகோதரர் ஹம்சா என்பவரையே தூதாக நியமிக்க ஹம்சா அவர்கள் சம்ம தித்து எழுந்து குவைலீது வீட்டுக்குப்போய் அவனைக் கண் டார்கள்.

குவைலீது ஹம்ஸா அவர்களை எதிர்கொண்டழைத்து ஓர் ஆசனத்தில் வீற்றிருக்கச்செய்து பாகு, வெள்ளிலை, சந்தன முதலியவைகள் கொண்டுவந்து வைத்து உபசரித்துத் தாங்கள் இவ்விடத்திற்கு வந்த காரணம் யாது? என்று அன்போடுங் கேட்டான். ஹம்சா அவர்கள் குவைலீதே! எமது சகோதரர் அப்துல்லா என்பவரது அருமந்தப் புதல்வராகிய முகம்மது என் பவருக்கு இவ்வூரிலுள்ளவர்கள் யாவரும் பெண் தருகிறோம்

என்று அவரவரே சொல்கிறார்கள். ஆயினும், எல்லாப் பாகத்தி லும் சிறந்த உமதிடத்தில் அவைகளைச்சொல்லி உமது மனோ பீஷ்டத்தையும் கேட்டு வரும்படி எனது தமையனார் ஆக்கியா பித்தனுப்பியதால் அவர்கள் உத்தரவைச் சிரமேற்கொண்டு யான் இங்குவந்தேன் உமது அபிப்பிராயம் இன்னதென்று சொல்லுவீ ராக என்றனர்.

ஹம்ஸா அவர்கள் சொன்ன வசனத்தைக் குவைலீது கேட்டு அகமகிழ்ந்து நல்லதென்று சம்மதித்து இதை அபீத் தாலிபு அவர்களுக்குப் போய்ச் சொல்லுங்களென்று அனுப்பி வைக்க, ஹம்ஸா அவர்கள் அபீத்தாலிபு முதலியவர்களுக்குத் தெரிவித்தார்கள்.

அபீத்தாலிபு அவர்கள் அந்த வசனத்தைக் கேட்டு மஹா குதூகலங்கொண்டு தமது சுற்றத்தார்களுக்கு அறிவித்து, அறி விற் சிறந்த சில முதியவர்களுடன் தங்கள் சகோதரர்களாகிய ஆரிது, குதம், சுபைறு அப்துல்கஃபா, அபூலஹபு, கைதாக்கு, கிருறு, அப்பாசு, ஹம்ஸா, முகைரூ என்பவர்களையும் அழைத் துக்கொண்டு குவைலீதிடம் சென்றார்கள். அவர்கள் வருகை யைக் குவைலீது கேள்வியுற்று எதிர்சென்றழைத்து அவரவர்க் குத் தக்கபடி மரியாதைகள் புரிந்து மேகக் குடையையுடைய நபிகள்நாயகம் அவர்கள் விவாக சம்பந்தமாய்த் தாங்கள் எனது வீட்டின்கண் வருவதற்கும் நான் ஆதிகாலத்தில் என்ன தவத் தைச் செய்திருந்தேனோ? என்று முகமன் கூறினான்.

அபீத்தாலிபு அவர்கள், குவைலீதே! உமது புதல்வி கதீஜா நாயகியை எனதுமகன் முஹம்மது என்பவருக்கு விவாகம் முடிக்க உம்மிடத்தில் வந்தேன் என்க, அதற்குக் குவைலீது அந்த முகம்மதென்பவர் எனது மருகராவதற்கு நான் என்ன மாதவஞ் செய்தேனோ? என்று சொல்லிச் சம்மதிக்க, அங்குவந்த வர்கள் எல்லோரும் அதற்கு உடன்பட்டு குவைலீதே! முகூர் த்தநாள் இன்னதென்றும் சீதனப்பொருள் இவ்வளவென்றும் சொல்லி வெற்றிலை பாக்குத் தருவாயாக என்று கேட்டனர்.

குவைலீது அதற்கிசைந்து வெற்றிலைபாக்கு தக்கோலம் கிராம்பு, ஏலம், சாதிக்காய், பத்திரி முதலான சகல பரிமளவர்க்கங்களுடன் ஒரு பொன் தாம்பாளத்தில் வைத்துக் கொடுக்க அபீத்தாலிபு அவர்கள் வாங்கி அங்குள்ள வேதியர்கள் பெரியோர்கள் முதலிய அனைவருக்கும் வழங்கி தங்கள் வலக்கரத்தைக் குவைலீது வலக்கரத்தோடு பொருத்தி முகூர்த்தமானது வருகிற முதல் திங்கட்கிழமை யென்றார்கள்.

அதற்கு எல்லோர்களுஞ் சம்மதிக்க அபீத்தாலிபு அவர்களும் அவர்கள் சகோதரர் முதலானவர்களும் குவைலீதிடத்தில் உபசாரத்துடன் விடைபெற்றெழுந்து தங்கள் வீடுவந்து சேர்ந்தார்கள். அபீத்தாலிபவர்கள் தங்கள் மனைவியாராகிய பாத்திமா என்பவருடன் நடந்த வர்த்தமானங்களை சொல்லி மகிழ்ந்திருந்தார்கள். (இன்னும் வரும்.) பத்திராதிபர்.

கொல்லாமையே சிறந்த தருமம்.

வயிற்றுப் பிழைப்பு ஒன்றையே முக்கிய நோக்கமாகக் கொண்டு வாழும் போலி வேடதாரியாகிய பூசாரி, "தான் பெரிய பக்திமான்," என்று பிறருக்குக் காட்டிக்கொள்ளும் பொருட்டு நிறைய விபூதி ருத்திராக்ஷங்களை அணிந்துகொண்டு, கொலைப் பாதகத்திற் கஞ்சாது, தன்னுடைய இடது கையினாலேயே ஆட்டுக்குட்டியின் வாயை நெரித்துக்கொண்டு, வலது கையிலே உள்ள கடுமையான அரிவாளினால் ஆட்டுக்குட்டியை ஒரே வெட்டில் உடல் வேறு தலை வேறாகக் கீழே விழும்படி வெட்டப்போகிறான். அறவினை அறியாத அவனைப்போன்ற மற்றொருவன், அந்த ஆட்டுக்குட்டியின் கொம்பைப் பிடித்துக்கொண்டு அவனுக்குத் துணைபுரிகின்றான். "எல்லா வுயிர்களும் தத்தம் மனைவி மக்களுடன் தர்மமார்க்கத்தை விட்டகலாது இன்பமயமாய் வாழ்தல் வேண்டும்" என்னுந் திருக்குறிப்பை உணர்த்துவார்போல், தமது இடதுபாகத்தில் இறைவியையும், இடையே இளங்குமரரையும் கொண்டு, தர்மம் எனும் ரிஷபவாகனத்தில் ஏறியிருக்கும் எல்லாம் வல்ல இறைவன் தாம் அருளிச்செய்த வேதத்தில்,

"அஹிம்சா பரமோதர்ம:" என்று உபதேசிக்கிறார். "அறவினை யாதெனிற் கொல்லாமை, கோறல் பிறவினையெல்லாந் தரும்" என்று கூறி, நமது திருவள்ளுவ நாயனாரவர்கள், "கொலை செய்யக்கூடாது" என்று தடுக்கிறார்கள். கோயில் கொலைக்களமாக விளங்குவது கண்டு, அக்கொடுமையைக் காணச்சகியாது, அதனை எடுத்துரைத்து முறையிடும்பொருட்டு, நடு நிலையுடைய அச்சிறு தெய்வம் சிவபெருமான்பாற் செல்கின்றது. கொலையே பாவங்களுள் எல்லாம் தலை சிறந்து விளங்குவது. கொலைப்பாவம் மிகக் கொடியது. அருளைக் கெடுத்து மருளைக்கொடுப்பது கொலை. கொலைக் களத்திலே கண்ணுடையவர்கள் நிற்கமாட்டார்கள். அம்மாவென அலறுஞ் சப்தத்தைக் கேட்கமாட்டார்கள். ஆவி சோர மெய் பதைபதைக்க இரத்தஞ்சொரியும் இன்னுயிர்களைப் பார்க்கமாட்டார்கள். ஓடிப்போய் அதனைத் தடுக்குமாறு ஆண்டவனை வேண்டுவார்கள். சிறு தெய்வங்களும் அவ்வாறே. ஆடு கோழி அறுக்கும் இடங்களிலுள்ள சிறு தெய்வங்களின் விக்கிரகங்கள் அவ்விடத்திலேயே யிருப்பினும், அத்தெய்வங்கள் அவ் விக்கிரகங்களில் இருக்கமாட்டா. ஐயோ, ஏன் இவ்வாறு எல்லாம் வல்ல இறைவனுக்கும் பிரியமில்லாத, இறைவனடியார்களுக்கும் பிரியமில்லாத, சிறு தெய்வங்களுக்கும் பிரியமில்லாத, சிற்றுயிர்களுக்கும் பிரியமில்லாத கொலைத் தொழிலைச் செய்து பழிக்கும் பாவத்திற்கும் ஆளாகி மீளாநரகிற் குள்ளாதல் வேண்டும்? வேண்டாம். சுத்த ஆராதனைசெய்து சுகமாக வாழ்வதே நலம்.

சுவாமிக்குக் கிடைப்பதென்ன?

சுவாமிக்காக ஆடுவெட்டுகிறோம்;கோழியறுக்கிறோம் என்று சிலர் சொல்லுகிறார்கள். சுவாமி ஆடு கோழி கேட்கிறது என்றும் அதற்காக வெட்டுகிறோமே யல்லாமல் வேறில்லையென்றும் சிலர் கூறுகிறார்கள். உண்மையைப் பார்த்தால் அப்படியில்லை. ஆட்டைப் பிடித்துக் கொண்டுபோய் தண்ணீரைத் தலைவழியே ஊற்றுகிறார்கள். அந்தத் தண்ணீர் உரோமத்தில் புகுந்து குறு

குறுவென்னவே ஆடானது உடலைச் சிலுப்பித் தண்ணீரை வெளியே வரும்படி செய்கிறது. உடனே பலிகொடுத்து விட்ட தென்று கூறி மடக்கிக்கொண்டு ரத்தஞ் சொரியக் கழுத்தை இரக்கமின்றி அறுத்து விடுகிறார்கள். ஐயோ! பாவம்!! வாய் பேசத் தெரியாத ஏழைப் பிராணியை வலுவுள்ள மனிதர்கள் கதறக் கதற மடக்கிக்கொண்டு கழுத்தை அறுத்து விடுகிறார் களே! ஆனால் இவர்கள் வாய்ச்சொல்லால் மட்டும் சாமிக்கு என் கிறார்களேயன்றி உண்மையில் ஒன்றையும் சாமிக்குக் கொடுக்க வில்லையே! ஆடு பிடித்தவுடனேயே தோலை விற்று விடுகிறார்கள்; பூசாரிக்குத் தலை சொந்தமாகிவிடுகிறது; கிழங்கள் சூப் சூப் என்று புலம்பிக் கொண்டிருக்கிறார்கள்; சிறுபிள்ளைகள் மூளைக்கு அலறுகின்றன; சட்டி கழுவி, அடுப்பில் கறியைப் பக்குவஞ் செய்வதற்காகத் தயாராயிருக்கின்றது. மிச்சமிருக்கிற எலும்பு கறிகுடல்களைக் கோத்துக் காயப்போட்டு வற்றலாக்குவதற்குப் பாயும், ஊசியும், கயிறும் மறுபக்கத்தில் எதிர்பார்த்திருக்கின் றன! சுவாமிக்குக் கிடைப்பது யாது? உண்மையில் ஒன்றுமில் லையே! சுவாமிக்கென்று சொல்லி ஆட்டைவெட்டு முன்னதாகவே எல்லாவற்றுக்கும் வழிசெய்து விடுகிறார்களே! இப்படி யாவற் றையும் ஒன்று விடாமல் மனிதர்கள் உபயோகித்துக்கொண்டு கழுத்தறுக்கிற பழியைமட்டும் சுவாமி தலையிலே சுமத்தப் பார்க் கிறார்கள். இப்படி ஏமாற்றுவதற்குச் சுவாமிகள் ஒப்புக்கொள் ளுமா? மனிதனை மனிதன் ஏமாற்றப் பார்ப்பதோடில்லாமல் சுவா மியையுமன்றோ இந்த ஆசாமிகள் ஏமாற்றப் பார்க்கின்றனர்! அன்பர்களே! சுவாமி கேட்கிறதென்பதற்கு அர்த்தமேயில்லை. உலகத்தையெல்லாம் படைத்துக் காத்துவருகிற கடவுள் கேவ லம் இன்றிருந்து நாளையிறந்துபோகிற மனிதனிடத்திலா வந்து அப்பா எனக்குப் பசிக்கிறது ஆடு கொடு, கோழி கொடு என்று கேட்கும். ஒரு நாளும் கேளாது. வீணாகச் சுவாமி பெயரைச் சொல்லி கொன்று வயிற்றில் அடைக்கவேண்டாம்! பாவத்தை மூட்டை கட்டவேண்டாம்!! எப்போதும் எதற்காகவும் ஏழைப் பிராணிகளைக் கொல்லாதீர்கள்! நன்மையுண்டாகும்.

ஆடுவெட்டுவது சுவாமிக்கா?
சுவாமியை ஏமாற்றப் பார்க்கிறீர்களே!!

தோலும் ரோமமும் தோல் வியாபாரிக்கு!
மலக்குடல் முதலிய யாவும் மனிதர் வயிற்றுக்கு!!
பிழுக்கையும் இரத்தமும் மண்ணிற்கு!!!
கறியும் எலும்பும் காக்கையின் ஊஞ்சலுக்கு!!!!
பிறகு சுவாமிக்குக் கிடைப்பது என்ன?

சுவாமிக்காக வெட்டுவதென்றால், ஆட்டை வாங்கிச் சுவாமிக்கு முன்னால் விட்டுவிட்டு சும்மா போய்விடுவீர்களா? அதைச் சுவாமி கொன்று தின்னுமா? வீணாகப்பொய் சொல்லியாவது, பயந்தாவது, பழியைச் சுவாமி தலையிற் போட்டு ஆடு வெட்டாதீர்கள்? நீங்கள் ஆடு வெட்டாததற்காக, உங்களுக்கு ஒருவிதமான கெடுதியும் வராதென்று சுவாமிபேரில் ஆணையிட்டு உறுதி கூறுகிறோம்.

கழுத்தை அறுக்காதீர்கள்! கழுத்தை அறுக்காதீர்கள்!!
கதறக் கதற ஆடு கோழிகளின்
கழுத்தை அறுக்காதீர்கள்!!!

நம்முடைய உடம்பிலிருந்து ஒரு சொட்டு இரத்தமாவது கொடுக்கச் சம்மதிப்போமா?

நமது கட்டை விரலையாவது அறுத்துச் சுவாமிக்குப் பலியிடுவோமா?

ஆட்டுக்குட்டி, கோழிக் குஞ்சுகளாகிய பச்சைப் பிள்ளைகளைக் கதறக் கதறக் கழுத்தறுப்பது நியாயமாகுமா? நமக்குப் போகிற வழிக்கு நல்லவழி கிடைக்குமா?

ஜாக்ரதை! ஜாக்ரதை!! நல்ல பிள்ளைகள் பிறக்கவேண்டுமானால், நோயில்லா வாழ்வு வாழவேண்டுமானால், நல்ல வழியிலே போகவேண்டுமானால், ஆடு கோழிகளை அறுக்காதீர்கள்! அறுக்காதீர்கள்!!

சுவாமி கேட்கவில்லை! மனுச்சாமிதான் கேட்கிறது!!

சுவாமி உங்கள் முன்னாலே வந்து, "எனக்கு வயிற்றைப் பசிக்கிறது! பசிக்கிறது!! ஆடு வெட்டிப்போடு! கோழி அறுத்துப்போடு!!" என்று சொல்லியது? இல்லை! இல்லை!! அதற்குப் பசிவந்தால், தெருவில் போகிற ஆடுகோழிகளை எல்லாம் வாரி வயிற்றில் போட்டுக்கொள்ளத் தெரியாதா? இல்லாவிட்டால் "நாளையதினம் நம்முடைய சந்நிதானத்திற்கு ஆடு கோழிகள் எல்லாம் வந்து சேரவேண்டும்" என்று ஒருஉத்தரவு போட்டால் அவைகள் வரமாட்டாவோ? என்ன பைத்தியக்காரத்தனம்! அவைகளைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்து, சந்நிதானத்திலே நிறுத்திக் கீழே மடக்கித்தள்ளி, அவைகளின்மேல் யமதூதர்போல் ஏறி மிதித்துக்கொண்டு, மனுச்சாமிகள்தானா கொறகொறவென்று அவைகளின் கழுத்தை அறுக்கவேண்டும்? ஆடு கோழிகளைக் கண்ணப்பதேவர் திருக்கண் சாத்தினவுடனேயே, நாக்கப்ப நாயனார் ஊற்றெடுக்கிறார்! வயிற்றப்பதேவர் கும்மாளம் போடுகிறார்! கும்பியடிகள் கூத்தாடுகிறார்! கறி வாசத்தைக் கண்டவுடனே, ஒரே மூச்சாகப் பிடித்து இழுக்கிறார் மூக்கப்ப சுவாமிகள்! குடலப்ப நாயனார் வாத்தியம் வாசிக்கிறார்! இத்தனை திருவிளையாடல்களையும் பார்க்கிறபொழுது, ஆடுகோழி அறுப்பது சுவாமிக்கா? மனுச்சாமிக்கா? எல்லாம் மனுச்சாமிகளுக்கே! ஐயகோ! ஆட்டை வெட்டிக் கோழியை அறுத்துப் போட்டுத்தானா வயிற்றை நிரப்பவேண்டும்? பூ இருக்க, இலை இருக்க, காய் இருக்க, கனி இருக்க, நெல் இருக்கக் கறியைத்தானா வைத்து அடைக்கவேண்டும்? வேண்டாம்! வேண்டாம்! கறியை வைத்து அடைக்கவேண்டாம்!! ஆடுகோழி அறுக்கவேண்டாம்!!!

காரைச் சிவனடியார்.

கோபம்.

ஓர் குடும்பத்துள் வாழ்க்கைத் துணைவர்கள், தாய், தந்தையர், உடன் பிறந்தோர்களும் தம்முள் ஒருவருக்கொருவர் மனவெறுப்பு தோன்ற ஏதேனும் பேசினாலும், ஏதாவது ஓர் காரி

யத்தைச் செய்தாலும் அதுபற்றி கோபமடையாமல் சாந்தமடைவதே குடும்பம் செவ்வனே நடைபெறுவதற்கு அனுகூலமாம். "சாந்தம் சாகரத்திலும் பெரிது" என்பது ஆன்றோர் வாக்கியமல்லவா? அங்ஙனம் சாந்தப்படாவிட்டால் தம்முள் சடர்பட்டு சதா சஞ்சலமடைவர்.

எஜமானன் தனது ஏவலாட்களிடம் தயையுடையவனாய் திருப்திகரமான கூலிகொடுத்தும் அவர்களிடத்தில் கோபம் செலுத்துவானானல் அவனது தயைமுதலிய நற்குணங்களும் தோன்றமாட்டா. வேலையாள்கள் மனவெறுப்படைந்து, "நெருப்பினிடத்தில் நெருங்கினால் தனது வெம்மை ஒன்றினாலேயே சுடும். இவரோ நமது கடமையைச் செய்யும்போழ்திலும் தனது கொடூர முகத்தாலும், கர்னகடூர வார்த்தைகளாலும் சுடுகிறான். இந்த முற்கோபியை விட்டுப் பிரிதலே நலம்." என்று உடனே ராஜீநாமா கொடுத்துவிடுவார்கள். சாந்தகுணமுடையவர்களை பலரும் தாமே சேர்ந்து அவரது குறிப்புகண்டு ஒழுகிய அன்போடும் நடந்துகொள்வார்கள். இவ்வித நிகழ்ச்சிகள் கண்கூடாய் காணத்தக்கனவே.

இவ்வாறு கோபத்தால் ஒரு காரியமும் நடைபெறுவதற்கில்லை யாதலால், ஒருவன் தன் மனதில் கோபம் என்பதையே நினைக்காமல் இருப்பானாகில் அவன் எண்ணிய பேறெல்லாம் எளிதில் கைவந்து பலனடைவான் என்னும் பொருளடக்கி,

உள்ளிய வெல்லா முடனெய்து முள்ளத்தா
னுள்ளான் வெகுளி யெனின்.

என்றார் திருவள்ளுவர்.

நமக்குப் பிறர்பேரில் கோபம் செனிக்கும் காலத்தில் அக்கோபத்தை அடக்கி "ஆறுவது சினம்" என்ற ஒளவை மூதாட்டியின் வாசகப்படி சாந்தமடையப் பழகுதல்வேண்டும். இக்கோபமானது சந்தோஷகரமான முகத்தைக் கொடூரமான முகமாகத் திருப்பிவிடும். எப்படியெனின் நாம் ஒருவரிடத்து சினமடையுங் காலத்தில் முகமானது விம்மிதமடைகிறது. விழிகள் சிவப்

படைந்து நெருப்புப் பொறிபோலும் அவ்வளவு கொடுமையான தோற்றத்தை அடைகின்றன. நரம்புகள் புடைத்து வெளித் தோன்றுகின்றன. இவ்வித சந்தர்ப்பத்தில் நமது முகத்துக் கெதிரில் திடீரென்று ஓர் கண்ணாடியை யாரேனும் காட்டுவார்களாயின் அவ்வாடியில் தோன்றும் நமது முகத்தின் கோரதோற்றத்தைக்கண்டு நாமே வெட்கமடையாமலிரோம். கோபத்தின் கொடுமையை நினைத்து அதை ஒழிக்க முயல்வோம். இக்கோபத்தைக் கட்டுப்படுத்தாமல் விட்டுவிட்டால் கரையுடைத்து விடப்பெற்ற வெள்ளம்போல மேலும் மேலும் அதிகரித்து பலவித பாவச்செயல்களையும் முன்பின் பாராமல் செய்யும்படியாகத் தூண்டி நம்மைஆட்டி அல்லற்படுத்தி கடோசியில் கொடியநரகத்தில் வீழ்த்தும் என்பது திண்ணம்.

பிறன் அறியாமை காரணமாக ஏதேனும் அபசாரம்செய்து இகழ்ந்த காலத்திலும் அதை அபசாரமாகக்கொள்ளாமல் பொறுப்பதோடும் தம்மை இகழ்ந்த ஓர் தீவினையின் பயனாக கொடுநரகத்தில் வீழ்வானே! என்று தம்மை யிகழ்ந்தவனுடைய அறியாமைக்காக வெகுவாய் இரங்கி வருந்துவதே நீதி உணர்ந்த பெரியோர்களுக்கு அழகாம். அவர்களைத் தான் மெய்த்தவர் என்று அறிவுள்ளோர் புகல்வர்.

நாலடியார்.

தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தால்—உம்மை
எரிவாய் நரகத்து வீழ்வர்கொல் என்று
பரிவதூஉம் சான்றோர் கடன்.

பிரபுலிங்கலீலை.

வைதவன் றன்னை நன்று வாழ்த்தின னெனவுந்தீய
செய்தவன் தன்னைநல்ல செய்தவ னெனவுங் கொள்வோன்
கைதவ மகன்றபுத்தி கண்டவ னவ்வா றன்றன்
பொய்தவ னென்ப தென்று புகன்றனர் புலவரன்றே.

கோபம் வந்து சீறுங்காலத்திலும் மந்திரித்த திருநீற்றைக் கண்டவுடன் சர்ப்பமானது ஒடுங்கிப்போவதேபோல் மதியில்லாத

வர்கள் தம்மைக் கொடுஞ்சொற்களால் தூஷித்தகாலத்தும் தமது குலவொழுக்கத்துக்கு அஞ்சி அடங்கிவிடுவார்களாம் நற்குடிப் பிறந்தோர். அப்படிக்கின்றி பிடிசாபம்! நீ மண்ணாய்ப் போகக் கடவது!! மரமாய்ப் போகக்கடவது!!! என்று துள்ளி விழுந்து தாண்டிக் குதித்து மூச்சைப்பிடித்து பல்லைக்கடித்து கண்கள் சிவப்பேறத் தாறுமாறாகப் பிதற்றுவது பெரியோர்க்கு அழகல்ல.

இவ்வாறு தம்மை வருத்தினோரைத் தாமும் வருத்திவிடுவதால் நாம் நினைத்தது முடித்தோம் என்னும் செருக்கால் வரும் ஒருநாளைய பொய்யின்பமேயாம். அறிவிலார் செய்த அபசாரங்களைப் பொருட்படுத்தாமல் பொறுத்துப் போவார்களானால் அறிஞர்கள் இவன் சினப்பகையறுத்த வீரன் என்று புகழவும் அவனது புகழ் உலகம் அழியுமளவும் நின்று நிலவும். தர்மபுத்திரரின் பொறுமையானது இன்னும் போற்றப் படுகிறதன்றோ? இன்னும் இவ்வுலகம் அழியுமளவும் நின்று நிலவும் என்பது திண்ணமன்றோ?

தமிழ்வேதம்.

ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

நாலடியார்.

நேரல்லார் நீரல்ல சொல்லியக்கால் மற்றது
தாரித் திருத்தல் தகுதிமற்—றோரும்
புகழ்மையாக் கொள்ளாது பொங்குநீர் ஞாலங்
கமழ்மையாக் கொண்டு விடும்.

நாயானது தன்னைக் கடித்தது என்று கோபங்கொண்டு தானும் அந்நாயைக் கௌவிக் கடிப்பவர் உலகத்தில் யாரேனும் உண்டோ? அன்றியும் நாம் கோபம் வந்தகாலத்து பிறரை வருத்தி விடுவோமாயின் அக்கோபத்தீ தணிந்தபிற்பாடு நமது மனச்சான்று நம்மை வருத்த ஆரம்பித்துவிடுகிறது கோபத்தால் புத்தியீனமடைந்து கண்டவாறு அவனைத் தூஷித்துவிட்டோமே

என்று பின்னால் உன்னிவருந்த நேரிடும். அதனால் பிறர் வருத்த வேண்டிய தேவையில்லை.

நாலடியார்.

காவா தொருவன் தன் வாய்திறந்து சொல்லுஞ்சொல்
ஓவாதே தன்னைச் சுடுதலால்—ஓவாதே
யாய்ந்தமைந்த கேள்வி யறிவுடையா ரெஞ்ஞான்றும்
காய்ந்தமைந்த சொல்லார் கறுத்து.

ப. வீரப்பத்தஞ்சவராயன். கருவேலி.

பெண்கள் பகுதி.

பெண்மணிகள் இளமையா யிருக்கும்போதே ஊக்கமாய்க் கல்வி பயிலவேண்டும். பன்னிரண்டு வயதிற்குமேற் கல்விக் கழகத்திற்குச் சென்று பயிலுதல் நமக்கு மரபன்று. பன்னிரண்டு வயதுக்குமேல் வீட்டிலிருந்து குடும்ப சமரக்ஷணத்துக்கு வேண்டிய சமைத்தல் முதலிய சகல காரியங்களையும் கற்றுக் கொள்ளவேண்டும்.

வீட்டை எப்போதும் சுத்தமாயும், அழகாயும் வைத்துக் கொள்ளவும், வீட்டிற்கு வேண்டிய துணி தைத்தல் பின்னுதல் போன்றனவும், நூல்நூற்றல், நெய்தல் முதலியனவும், கற்றுச் செய்தலும் மிகவும் சிறந்தது.

பள்ளிக்கூடத்திற் படித்ததுடன் கல்வியை விட்டுவிடாமல், வேலையில்லாத வேளைகளில் நல்ல நூல்களை கவனமாய்ப் படிக்க வேண்டும். அர்த்தந் தெரியாதவைகளைக் குறிப்பிட்டு, தாயார், தகப்பனார், உபாத்தியாயினி முதலியவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்.

பெண்கள் வீட்டுக் கணக்குகளைச் செவ்வையாய் எழுதத் தெரிந்திருக்கவேண்டும். அன்றியும் கணக்குச்செய்தலும் நன்கு தெரிந்திருக்கவேண்டும். வீண் வேடிக்கைகள், மனதைக் கெடுக்கும் கதைகள் முதலியன எப்போதும் பார்க்கவே கூடாது.

நல்ல நோன்புக்கதைகள், நளாயினி, சாவித்திரி, தமயந்தி, சீதை, சந்திரமதி, ஒளவை, ஆண்டாள், காரைக்காலம்மை, புநித வதியார், தேவகிதேவி, பார்வதிதேவி, மகாராணி மங்கம்மாள், அருந்ததி, அநசூயை, சக்குபாய், பத்மாவதி, ஜெயப்ரதை, புஷ்டாஞ்சாலி, கஸ்தூரிபாய், சாரளாதேவி, சௌதாமினி, சரோஜினிதேவி, பத்மாசனி தேவி, ருக்மணி தேவிபோன்ற பெரியார் சரித்திரங்களும் நல்ல நீதிநூல்கள், குறள், நாலடியார், நீதி வெண்பாப்போன்ற நூல்களையும் நன்ருய் கருத்துத் தோன்ற வாசிக்கவேண்டும். அவைகளின் அர்த்தங்களைத் தெளிவாய் ஐயந்திரிபறக் கற்றுக்கொள்ள வேண்டும். கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக என்றபடி கற்ற நீதிநூலின்படி நல்லொழுக்கத்தில் நிற்கவேண்டும். கடவுளிடத்தில் அதிக பக்தியுடன் ஒவ்வொரு வேலை தொடங்கும்போதும் ஈச்வரார்ப்பணமென்று செய்யவேண்டும்.

நம்முடைய பார்வைக்குத் தோன்றுவனவும் தோன்ருதனவுமாகிய எல்லாப் பொருள்களும் ஈச்வர சிருட்டியென்பதும், நம்முடைய சரீரத்தின் உறுப்புகள் யாவும் ஈச்வராநுக்கிரகத்தினலேயே இயங்குகின்றனவென்பதும் யோசித்துப் பார்ப்பவர்களுக்கு நன்ருய் விளங்கும். ஆகையினலே நாம் ஈச்வராநுக்கிரகமில்லாமல் யாதொன்றும் செய்ய வியலாது என்பதை யோர்ந்தபோதே நமக்கு பக்தி யுதிக்கவேண்டும். அப்படி யுதியாதாயின் அந்த ஜன்மம் மிருக ஜன்மமேயாம்.

பெண்கள் அயல்வீடு செல்லுதல் எப்போதும் கூடாது. அதனல் பல இடையூறுகளும் அவமானமும் நேரிடும்; வீட்டு வேலையும் கெடும்.

தேசோபகாரி.

தங்களுக்கு படிப்பிக்கும்படி ஸ்திரீகள் புருஷர்களை வேண்டுதல்.

இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

வித்தையைப்படிப்பியுங்கள் தயைசெய்து
வித்தையைப்படிப்பியுங்கள். (வித்தை)

அநுபல்லவி.

உத்தமவான்களே சத்தியபுமான்களே
உங்கட்குகண்களான பெண்களாம்எங்களுக்கு (வித்தை

சரணங்கள்.

1. திருத்தமாவேலைகள் எல்லாம்முடிப்போம்-வேலை
தீர்ந்தபின்புஸ்த கங்களேபடிப்போம்
வருத்தம்நீர்படக்கண்டால் மனம்துடிப்போம்-கீத
வண்ணங்கள்பாடிக் கொண்டுகால்பிடிப்போம்-பாட
மாட்டோமா—வீணை
மீட்டோமோ—நயம்
காட்டோமோ—சுகம்
ஊட்டோமோ—நல்ல (வித்தை)

2. வரவுசெலவின்கணக் கெழுதிவைப்போம்-பல
வகைவகைஉடுப்புகள் உமக்குத்தைப்போம்
பரவும்பலதொழில்நீர் பண்ணஒப்போம்-நல்ல
பக்ஷணம்கறிகளும் செய்யத்தப்போம்—நாங்கள்
படியோமோ—இருள்
விடியோமோ—மருள்
முடியோமோ—அருள்
பிடியோமோ—நல்ல (வித்தை)

3. வாணியும்நீரும்ஒரு கோத்திரமா- அவள்
வரப்பிரசாதம்உமக்கு மாத்திரமா
வீணில்அவட்கெங்கள்மேல் க்ஷாத்திரமா-நாங்கள்
மெய்ஞ்ஞானமார்க்கத்துக் கபாத்திரமா-உம்மை
வெல்லோமோ—கல்வி
கல்லோமோ—கவி
சொல்லோமோ—புத்தி
இல்லோமோ—நல்ல (வித்தை)

4. கொஞ்சம்நீர்கோபம்செய்யில் அஞ்சிடுவோம்-எங்கள்
குற்றம்பொருக்கச்சொல்லிக் கெஞ்சிடுவோம்
கஞ்சமதாகஉமை நம்பிடுவோம்-உம்மேல்
சாகித்தியம்செய்துதினம் கும்பிடுவோம்-நாங்கள்

தாழ்ந்தோமே—துயர்
ஆழ்ந்தோமே—உம்மைச்
சூழ்ந்தோமே—காலில்
வீழ்ந்தோமே—நல்ல (வித்தை)

5. அடித்தாலும்இகழ்ந்தாலும் கதிநீரே-உம்மை
அன்றிஎங்களுக்கினித் துணையாரே
படித்தால்பிழைத்துப்போவோம் பெரியோரே-இந்தப்
பஞ்சைகள்முகம்பாரும் துரைமாரே-உங்கள்

பதம்பூண்டோம்—அபி
மதம்நீண்டோம்—உங்கள்
இதம்தாண்டோம்—அசங்
கதம்வேண்டோம்—நல்ல (வித்தை)

6. படியாதஆண்கள்உட னேநேசம்-சற்றும்,
பண்ணாநீர்சம்மதியீர் லவலேசம்
மடம்உறும்எங்களுடன் சகவாசம்-செய்ய
மட்டும்உமக்கில்லையோ சங்கோசம்-இது

மதிமோசம்—வரும்
அதிஹாசம்—மனம்
பதிபாசம்—அற
இதிகாசம்—உடன் (வித்தை)

7. வித்தையில்லாப்புருஷன் செய்கையைப்பாரும்-அந்த
விதமல்லவோபடி யாமடவாரும்
உத்தமியையேவிரும்பு வீர்நீரும்கல்வி
உணராவிட்டால்குணம்எப் படிச்சேரும்-இதை

ஓரீரோ—முகம்
பாரீரோ—துயர்
தீரீரோ—தயை
கூரீரோ—நல்ல (வித்தை)

8. உத்தியோகம்தந்தாலும்ஒரு கைபார்ப்போம்-தினம்
உதவிசெய்துங்கள்தொழில் களைத்தீர்ப்போம்

பத்தியாய்க்குடித்தனம் தலைஎற்போம்-கல்வி
பாலர்க்குப்போதித்துநல் வழிசேர்ப்போம்-எங்கள்

பதிநீரே—சர்வ
நிதிநீரே—தினம்
கதிநீரே—கன
மதிநீரே—நல்ல (வித்தை)

9. படித்தால்மிருகம்போல்நாள் கழிப்போமோ-என்றும்
பரபுருஷர்முகத்தில் விழிப்போமோ
அடித்தாலும்முகம்கோணிச் சுழிப்போமோ-கல்லா
தவர்கணவரானாலும் பழிப்போமோ-பல

அணிவேண்டோம்—நல்ல
துணிவேண்டோம்—நவ
மணிவேண்டோம்—காமப்
பிணிவேண்டோம்—நல்ல (வித்தை)

10. இரவில்நீர்தூங்கினபின் நாம்படுப்போம்-நீங்கள்
எழுமுன்எழுந்துவேலை களைத்தொடுப்போம்
தருமவதிகள்என்று பெயர்எடுப்போம்-நாங்கள்
சந்ததம்வேதநாயகனை அடுப்போம்-மிகத்

தழையோமோ—கல்வி
நுழையோமோ—உமை
அழையோமோ—ஜீவன்
பிழையோமோ—நல்ல (வித்தை)

இதுவும் அது.

இராகம் மோகனம் திரிபுடைதாளம்.

பல்லவி.

கேளும்பூமான்களே கிருபைவைத்
தாளும்சீமான்களே (கேளும்)

அநுபல்லவி.

நாளும்கதிஇல்லா எங்கள்மேல்வர்மமோ
தாளுறும்தூசிபோல் தள்ளுதல்தர்மமோ (கேளும்)

20

சரணங்கள்.

1. காலைக்கும்மாலைக்கு மூலைக்குள்எங்களை
ஆலைக்கரும்புபோல் தேய்த்தீர்—பாக
சாலைக்கும்மன்மத லீலைக்கும்ஏவின
வேலைக்கும்எங்களை மாய்த்தீர்

மூலக்கல்விநாங்கள் வாசித்தால்ஆபத்தோ
மூடப்பெண்கொள்வீர் உமக்குப்பெரும்பித்தோ
ஓலைக்கிரந்தங்கள் உங்கள்பாட்டன்சொத்தோ
உமக்குத்தானென்ன தலைமேல்தலைபத்தோ (கே)

2. ஆதியிற்பெண்ணாலே மேதினியோர்கள்உண்
டானவகைமறந் தீரோ—பெண்
சாதிபுருஷனில் பாதியென்றமனு
நீதியையுந் துறந்தீரோ

பாதிஉடலைப் பறக்கவிடலாமோ
பாவபுண்யம்தெரி யாமல்கெடலாமோ
நீதிஇல்லாதெம்மை நிந்தித்திடலாமோ
நிந்தித்துப்பின்எங் களைநீர்தொடலாமோ (கே)

3. நாரியரைஒரு காரியம்இல்லா
நடைப்பிணம்என் றெண்ணினீரே—தேவர்
ஊரில்பெண்கள்கொண்ட சீரினை ஆகிலும்
உற்றுப்பாரும் ஐயர்மாரே

பாரிதனைநாவில் வைத்தான்பிதாமகன்
பாகம்சிரம்வைத்த தால்சிவன்மாசுகன்
மார்பில்வைத்தான் ஹரி பெண்திருடன்குகன்
மங்கைதேடிச்சந்தி வந்தான்கரிமுகன் (கே)

4. உங்கட்குதவியாய் எங்களைத்தேவன்
உண்டாக்கியதை அறியீரோ—செல்வ
மங்கைஉடன்கல்வி நங்கைமுதலானோர்
மாதர்என்று குறியீரோ

எங்களை அல்லாமல் நீங்கள்உதித்தீரோ
ஏறி ஆகாயத் திருந்துகுதித்தீரோ
அங்கப்பால்உண்ணுமல் தேகம்உதித்தீரோ
அடிமைஎன்றெங்கள் தலையில்விதித்தீரோ (தே)

5. போதகயூரோப்பு மாதர்களைக்கண்டு
பொங்கிப்பொறுமை கொண்டோமே-என்றும்
பேதம்இல்லா இந்தி யாதனில்நாங்கள்
பிறந்தென்னலாபம் கண்டோமே
நாதக்கல்விக்கு நகைஎந் தமூலையே
நாங்கள்விரும்போம் நவரத்னமாலையே
வேதநாயகன்செய் பெண்மதிமாலையே
வேண்டினேம்தாரும் விடோம்உங்கள்காலையே (தே)

மூடனை விவாகஞ்செய்யாதபடி ஒருஸ்திரீயை தடுத்தல்.

இராகம் புன்னுகவராளி அடதாளசாப்பு.

பல்லவி.

மாதே என்வார்த்தை தள்ளாதே-அந்த
மாப்பிள்ளைதன்னைக் கொள்ளாதே (மாதே)

அநுபல்லவி.

ஆதரவாக அரவைத் தொடலாமோ
ஆழமறியாமற் காலையிடலாமோ
போதமில்லானுக்கு வாழ்க்கைப்படலாமோ
பொன்னே ஒளிர்-மின்னேகெடு
முன்னேமதி-சொன்னேனடி (மாதே)

சரணங்கள்.

1. பொன்னே அவன் ஆளழகனுனுலுமே
புத்தியில்உலக்கைக் கொழுந்து-வித்தை
தன்னை அறியானைக் கொள்வதைப்பார்க்கினுஞ்
சாகலாங்கிணற்றில் விழுந்து
உன்னைக்கைப்பாடு படச்சொல்லித்தாக்குவான்

ஊர்மாடுமேய்க்கவே தான்தடி தூக்குவான்
பின்னையும்உன்னைத்தான் பேய்க்கோலம்ஆக்குவான்
பெண்ணே இரு-கண்ணே இதை
எண்ணேமொழி-பண்ணே நிகர் (மாதே)

2. உத்தமியேஅவன் ஞானமிருக்கின்ற
ஊரையும்பார்த்தறியானே-தினஞ்
சுத்தநிர்மூடரைக் கூடிக்குடித்துன்
சுகநலத்தைக் குறியானே
நித்தமும்தாசிகள் வீடுகட்கோடுவான்
நீங்காமற்சூது நிதம்விளையாடுவான்
சித்தமுனக்குப் பட்டாராமம்போடுவான்
தேனேமட-மானேதிடம்
நானேசொன்-னேனேயடி (மாதே)

3. மண்ணுக்குள் ஆணுக்கழகுபடிப்பும்
மதியுஞ்சுகுணமுந்தானே-வெறுங்
கண்ணுக்கழகும்பணமும் இருந்தென்ன
காரியஞ்சொல்லடி தேனே
புண்ணியவான்ஏழை யானாலுங்கொள்ளடி
பொய்யன்பணக்காரனானாலுந்தள்ளடி
வண்ணங்கொள்பெண்ணுக்காண் பஞ்சமோவில்ளடி
மாதேஇது-தீதேஇனி
வாதேசெய்-யாதேயடி (மாதே)

கற்பிலக்கணம்.

[லக்ஷ்மி கூறுவது]

கற்பு என்பது அந்நிய புருஷரை நோக்காமலும் விரும்பாமலும் இருப்பதுமட்டும் தான் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்னும் நமது ஔவை மூதாட்டியார் இனிய கருத்தைச் சிந்தித்தால் கற்பென்பது கணவனுடன் எதிர்த்துப் பேசாமலிருப்பதுதான் என்பது செவ்வனே விளங்குகிறது. இதனால் கணவனுடன் எதிர்த்துப்

பேசிவிட்டால் கற்பு என்னும் ஜீவன் போய்விடுகிறது. அப்புறம் அந்தப் பெண் ஒரு நடைப்பிணமே யன்றி வேறில்லை.

1. கணவன் உண்டபின்பு தான் உண்ணுதலும், அவன் நித்திரை செய்தபின்பு தான் நித்திரை செய்தலும், அவன் நித்திரையிலிருந்து எழுவதற்குமுன் தான் எழுதலும் குற்றமில்லாத கற்புடைய பெண்களது செய்கையாம்.

2. கணவன் களிக்கும்படி நல்ல ஆபரணங்களை யணிந்து கொண்டு, அவனெதிரில் செல்வர். அவன் பிரிந்து போயிருக்கிறபொழுது அவ்வாபரணங்களை அணிந்துகொள்ளார்.

3. கணவன் கோபித்துக் கொண்டால், அவன் எதிரிலே நின்று, எதிர்மொழி பேசார். தன்னையடித்தாலும் மனங்களிப்புற்றே யிருப்பார் கற்புடைய பெண்கள்.

4. தாங்கள் இருக்கும் வீட்டைவிட்டு வெளியே போகார். அப்படிப் போகின்ற பெண்களது முகத்தைக் கண்டாலும் பொறுக்கார்; கணவன் இன்னது செய் என்று ஏவுதற்கு முன்னமே குறிப்பறிந்து செய்வார்.

5. திருவிழாப் பார்த்தல், விரதங்கள் அனுஷ்டித்தல், குற்றமில்லாத புண்ணிய நதிகளில் முழுகுதல், தெய்வந் தொழல், ஆகிய நற்காரியங்களையும் கற்புடைய பெண்கள் கணவர் ஏவலின்றிச் செய்யார்.

6. தங்கள் ஆபரணங்களைச் சக்களத்திக்குக் கொடுத்துவிட்டாலும் கணவன்மேல் கோபம் கொள்ளார். பெரியோரில்லாத தனி வீட்டில் இரார்; பிறர் வீட்டுக்குப் போகார் சுத்தமாகிய நெஞ்சையுடைய புண்ணிய மாதர்.

7. கணவன் உத்தரவின்படி துறவிகளுக்கும், பிச்சைக்காரர்களுக்கும், கைத்தொழில் செய்கிறவர்களுக்கும், குலதெய்வங்களுக்கும், விருந்தாளிகளுக்கும் பங்கிட்டுப் பின் சந்தோஷமாய் இருப்பார்கள்.

8. கணவன் விரும்பியவற்றை அவன் கேட்பதற்கு முன் குறிப்பறிந்து கொடுப்பார். கணவன்மேல் அவதூறானவைகள் யாராகிலும் சொன்னால் சொல்பவர் முகத்தையும் பாரார்.

தகப்பன் மகளுக்குப் புத்திகூறல்.

இராகம் சஹானா ரூபகதாளம்.

பல்லவி.

புத்தி இது மகளே-உனக்குநற்-புத்தி இது மகளே (புத்தி)

அநுபல்லவி.

நித்தியமும்பரன் நேசம்விடாதே
சத்தியமார்க்கத்தைத் தாண்டிக்கெடாதே (புத்தி)

சரணங்கள்.

1. ஆலயம்குருக்களை அசட்டைபண்ணாதே
அடிக்கடிஜெபஞ்செய்யா திருக்கஒண்ணாதே
காலந்தனைவீணிற் கழிக்கஎண்ணாதே
கண்ணேபிக்ஷை யிடாமல்உண்ணாதே (புத்தி)

2. மாதாபிதாக்களை மகிழ்ந்துநீதாங்கு
மண்ணில்நல்லபிள்ளை யென்றுபேர்வாங்கு
தீதுகள்உனக்குச் செய்தோர்க்குமேதீங்கு
செய்யாமலிருப்பது திருவுளப்பாங்கு (புத்தி)

3. ஞானபுஸ்தகங்களை நாளும்நீவாசி
நல்லவருடன்கூடி நாதனைநேசி
ஈனர்தமக்குஞான மேஉபதேசி
என்றுங்குணவதி யேமகராசி (புத்தி

4. உயிர்போனாலும்நீ ஒருபொய்சொல்லாதே
உன்வீடுகடந்தயல் வீடுசெல்லாதே
பயில்மறுபுருஷர்கள் பார்க்கநில்லாதே
பாவத்தைக்கனவிலும் நினைத்தல்பொல்லாதே (புத்தி)

5. அம்புவிழியே அறங்கைவிடாதே
அற்பப்பொருள்விரும்பி ஐயோகெடாதே
வம்புக்காரிகளுடன் வார்த்தைகொடாதே
மற்றவர்பொருளைக்கண் டாசைப்படாதே (புத்தி

6. வாழ்வுவந்தாலும்நீ மயங்கித்துள்ளாதே
மற்றவர் இழிவையுன் வாயால்விள்ளாதே
தாழ்வுவந்தாலும்நீ சலித்துக்கொள்ளாதே
சகலமும்பரன்செயல் தடுத்துத்தள்ளாதே (புத்தி)

7. மாமிநாத்திகளை மதித்துறவாடு
மகளுந்தாயும்போலே மகிழ்ந்துநீ கூடு
சாமியாகுங்கணவன் தயவைநீதேடு
தலையணைமந்திரம் ஓதுதல்கேடு (புத்தி)

8. தப்பாமல்எளியரைத் தாங்கிக்கைதூக்கு
தானதருமம்ஜெப தபத்தில்நாள்போக்கு
கைப்பாகத்தாலேஉன் கணவனார்மூக்கு
கம்மென்றுமணமேறக் காய்கறியாக்கு (புத்தி)

9. விடியுமுன்எழுந்துநீ வேலையைநாடு
வீட்டைக்கண்ணாடிபோல் விளக்கிக்கையாடு
உடலும்ஆடையும்அழுக் கொழியநீராடு
உடலம்பெருக்கத்தீனி உண்பதுகேடு (புத்தி)

10. சொந்தவேலைகள்செய்யச் சோம்பிநையாதே
துன்பஞ்செய்தவர்க்கும்நீ துன்பஞ்செய்யாதே
வந்தஎளியவரை வாட்டிவையாதே
மாவேதநாயகன் வார்த்தைபொய்யாதே (புத்தி)

உத்தம ஸ்திரீயின் லக்ஷணம்.

இராகம் சாரங்கா ரூபகதாளம்.

பல்லவி.

எவளோஅவளே குலநாரி அவள்
இகபரம்இரண்டுக்கும் உபகாரி (எவளோ)

அநுபல்லவி.

அவனிதனைவிதிக்கும் ஆண்டவனைத்துதிக்கும்
அனகபூஷணி அமிர்தபாஷணி
கனகதூஷணி கலகதுவேஷணி (எவளோ)

சரணங்கள்.

1. நித்திரையிலுங்கணவன் தியானம்-என்றும்
நீங்காதபெரிய அபிமானம்
பத்தினிகளுக்கெல்லாங் குருஸ்தானம்-அவள்
பரபுருஷருக்கு மாதாசமானம்
சத்தியம்பொறை அருள் சாந்தம் அவட்குப்பொருள்
தர்மகஞ்சனி-சமயரஞ்சனி
கர்மபஞ்சனி-கனநிரஞ்சனி (எவளோ)

2. உத்தமகுணங்களே ஆபரணம்-ரத்ன
ஓலைமுதல்நகைகள் ஒருதிரணம்
பத்தாவைப்பிரிவது வேமரணம்-வரும்
பந்துஜனங்கட்கெல்லாம் ஆதாரணம்
சுத்தசித்தம்உடையாள் தூய அன்னநடையாள்
துதிகொள்சுந்தரி-சுபநிரந்தரி
மதியில்மந்திரி-வசனதந்திரி (எவளோ)

3. சந்திரபிம்பம்போ லுந்திருமுகமே-அவள்
தரிசனம்பிர்மா னந்தசுகமே
எந்தவேளையு மிருதுவாசகமே-சீலம்
ஈவாள் அருந்ததிக்கும் யாசகமே
வந்துதனை அடுக்கும் வறியர்க்கெல்லாங்கொடுக்கும்
மலநிவாரணி-வடிவபூரணி
குலசிரோமணி-குணஉதாரணி (எவளோ)

4. குண அழகொன்று லக்ஷாந்தரமே-சொல்லுங்
கொடுவிஷம்குணமில்லாள் சுந்தரமே
உணர்வில்லாள்வீடு வனாந்தரமே-ஞானம்
உத்தமிக்கென்றுஞ் சுதந்தரமே
அனுகும்பர்த்தாகுரூபம் அவட்குத்திவ்யசொரூபம்
அதிகநயவதி-அமிர்தகிரணமதி
புதியசுபநிதி-புருஷர்தவநிதி (எவளோ)

5. சகலமுந்தெரிந்த வித்யாதீபம்-என்றும்
தலைவன் ஊழியமே காலக்ஷேபம்

பகாஒண்ணுமகிமைப் பிரதாபம்- அவள்
பாக்கியங்கணவன் பிரியசல்லாபம்
நிகரில்வேதநாயகன் நேசமேபேசுஞ்சுகம்
நித்தியநவமணி- நிகர்வகுண அணி
அதிகவிதரணி- அரியகிரகணி (எவளோ)

பெண்பார்க்கத் தூதனுப்புதல்.

இராகம் உசேனி ஆதிதாளம்.

பல்லவி.

நல்லபெண்ணைப்பார் நீதூதா
நல்லபெண்ணைப்பார் நீதூதா (நல்ல)

அநுபல்லவி.

அல்லடாகேள் இந்தப் பூமியின்மேலே
ஆயிரங்காலத்துப் பயிராகையாலே (நல்ல)

சரணங்கள்.

1. அதிகபேச்சுக்காரி பெரும்வம்பி
ஆயிரமானாலும் அவள்வேண்டாந்தம்பி
நிதம்நிதம்ஊரெல்லாம் நீட்டுவாள்கம்பி
நிச்சயம் அவள் ஆகாள் நீஎன்சொல்நம்பி (நல்ல)

2. எழுத்துவாசகம்அறி யாதவள்மட்டி
ஏதும் அறியாள் அவள் சுரண்டுவாள்சட்டி
கழுத்திலே அவளுக்குத் தாலியைக்கட்டிக்
காரியமில்லை அது காசுக்குநஷ்டி (நல்ல)

3. அழகுங்குணமுமுள் ளவள்நல்லஜோடு
அழகில்லையாயினும் குணத்தையேதேடு
பழகுநற்குணமில்லா அழகியின்வீடு
பாம்புபுலிகாடி வாழ்ந்திடுங்காடு (நல்ல)

4. வீட்டுவேலைதெரி யாதவள்வேம்பு
மினுக்கும்அவள்குலுக்கு மேவெறும்வீம்பு

கூட்டுநற்குணமில்லாக் கொடியவள்பாம்பு
குலத்தைக்கெடுக்கவந்த கோடாலிக்காம்பு (நல்ல)

5. நகைகள்தரித்துமஞ்சள் வாடைகள்பூசி
நாடெங்குந்தெரியவே நகைத்துக்கைவீசி
சொகுசுடன்நடப்பவள் ஆயிரந்தாசி
சும்மாவந்தாலும் அவள் வேண்டாம்சீசீ (நல்ல)

6. தேவதாபத்தி இல் லாதவள்கள்ளி
திருட்டுக்கும்புரட்டுக்கும் அவள் ஒருபள்ளி
தாவில்புருஷன்குடிக் கவள்பெருங்கொள்ளி
சனியனைவிலக்கு வாங்காமல்நீதள்ளி (நல்ல)

7. உடமைகளுடன்பணங் காசின்மேல்இச்சை
உள்ளவள்சண்டைக்குக் கட்டுவாள்கச்சை
இடைவிடாமல்கெடு மேஎன்னலச்சை
இவளைக்கொள்ளுவதிலும் எடுக்கலாம்பிச்சை (நல்ல)

8. சந்ததங்கணவன்மேல் ஒழியாப்பத்தி
சாந்தம்பொறுமைதயை . தானம்நற்புத்தி
எந்தவேளையும்உடல் ஆத்துமசுத்தி
இல்லாதவள் அவன் கழுத்துக்குக்கத்தி (நல்ல)

9. நல்லவள்ஏழையா னாலுந்தடாதே
நானூறுபோனாலும் நீபின்னிடாதே
பொல்லாதவள்கையில் காட்டிக்கொடாதே
புலியைக்கொண்டுவந்தென்னைத் தெருவில்விடாதே (நல்ல)

10. சகலகாரியமும் தெரிந்தவள்சிலாக்யம்
தரித்திரத்திசையிலும் அவள்பெரும்பாக்யம்
இகபரம்இரண்டுக்கும் அவளேயோக்யம்
என்றுசொன்னான்வேத நாயகன்வாக்யம் (நல்ல)

பெண்மணி.

வைத்தியம்.

(ஆபத்சகாயம்)

(119-ம் பக்கத் தொடர்ச்சி.)

மாங்கொட்டைப் பருப்பைப் பாலிற்கொள்ள, சீதம், இரத்தக்கடுப்பு, மூலக்கொதிப்புத் தீரும்.

புளியவித்தின் மேல்தோலைப் பாலிற்கொள்ள, சுக்கிலமேகம், அதிசாரம், உந்திப்புண், நீர்க்கடுப்பு, வெட்டை தீரும்.

கழற்சிக்காய் வித்துப் பருப்பைப் பாலிற்கொண்டாலும், பருப்போடு தேங்காய் கூட்டித்தின்றாலும், பருப்போடு வெள்ளுகாயிலையைக் கூட்டி அரைத்துத் தின்றாலும், பருப்பை முட்டையிற் பொரித்துத் தின்றாலும் அண்டவாதம், பக்கசூலை, குன்மவாயு தீரும்.

நெரிஞ்சிக்காயைப் பாலிற் கொள்ள, வெட்டை, எலும்புருக்கி, நீர்க்கட்டு, சதை அடைப்பு, நீர்ச்சிறுப்பு நீங்கும்.

நீர்முள்ளி வித்தைப் பாலிற்கொள்ள, மேகம், அதிசாரம், நீர்வீக்கம், இளைப்பு இருமல் தீரும், விந்தூறும்; இரத்தவிருத்தியாகும்.

பூசினிவித்தைப் பாலிற்கொள்ள, பித்தம், மேகம், அனல் நீங்கும், உடல் குளிர்ந்து புஷ்டியாகும்.

வெள்ளரிவித்தைப் பாலிற்கொள்ள, நீர் அடைப்பு, கல்லடைப்பு, நீர்க்கட்டு, தசை அடைப்பு, நீர்த்தாரை விரிவு, நீர்ச்சிறுப்பு, கிருச்சரம் நீங்கும்.

வெள்ளைப்பூண்டைப் பாலில் அவித்துக்கொள்ள, நெஞ்சடைப்பு, வாயு, மூலம், குன்மம், பீலிகை, உதரநோய் வெட்டை க்ஷயம் தீரும்.

இஞ்சியைப் பாலிற்கொள்ள, இருமல், இளைப்பு, சூலைவாதம் குன்மம், தாபசோபம், மயக்கம், வாயு, மந்தம், பித்தம் தீரும்.

கடுக்காயைப் பாலிற்கொள்ள, காயசித்தியாம், க்ஷயம், காசம் ஈளை, இருமல், சீதக்கடுப்பு, மலபந்தம் தீரும்.

பரங்கிப் பட்டையைப் பாலிற்கொள்ள, சூலை, கரப்பான், குஷ்டம், கிரந்தி, வாயு, வாதம் தீரும்.

சண்டதிப்பிலியைப் பாலிற்கொள்ள, குருக்குவலி, வாயு, வாதம், தோஷம், நாவறட்சி, தலைநோய், வாந்தி, விக்கல் தீரும்.

கோஷ்டத்தைப் பாலிற்கொள்ள, வெட்டை, காந்தல், மூட்டுகளிலும் பொருத்துகளிலும் உள்ளவலி, முகம் கைகால் எரிவு, காந்தல், கிற்றுமைநாற்றம், காசம், பித்தம் தீரும்.

அக்கிராகாரத்தைப் பாலிற்கொள்ள, நாவறட்சி, ஜன்னி தோஷம், வாந்தி, வாயு, பித்தம், உஷ்ணம், கபம் தீரும்.

கசகசாவைப் பாலிற்கொள்ள, வெட்டைச்சுரம், மேகதோஷம், எலும்புருக்கி, பித்தச்சூடு நீர்க்கடுப்பு நீங்கும்.

அதிமதுரத்தைப் பாலிற்கொள்ள உடல் குளிரும்: பித்தம், மேகம், காந்தல், எரிவு, வெறிபித்தம், கப்பம் நீங்கும்.

பேரீச்சம்பழத்தைப் பாலிற்கொள்ள, தாகம், பித்தம், வாந்தி, நெஞ்செரிவு, மேகச்சூடு தீரும்.

முந்திரிப்பழத்தைப் பாலிற்கொள்ள, வாந்தி, பித்தம், மயக்கம், அரோசியம், தாகம் உஷ்ணம் தீரும்.

க. ஞானபூபதி.

"ஆத்ம சக்தி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

இதில், லௌகீக வைதீகங்களுக்கான அரிய விஷயங்கள் செந்தமிழ் நடையில் பல தக்கோரால் எழுதப்பட்டு வெளிவரும்.

இலக்கிய இலக்கண ஆராய்ச்சி, வேதாந்தம் புராண இதிகாச நுட்பம், சுதேச கீதங்கள், நீதிக்கதைகள், விகடம், இவை ஆண்பாலர் பெண்பாலர் அனைவருக்கும் நற்பயனளிக்கத்தக்கவை.

சஞ்சிகைதோறும் அரிய நவீனகம் (நாவல்) தொடர்ச்சியாய் எழுதப்படும்.

சந்தா விபரம்.

உள்ளூருக்கு (புதுவை)	ரூ.	0-12—0
வெளியூர்கட்கு	,,	1—0—0
வெளிநாடுகளுக்கு	,,	1—4—0

விலாசம்:—"ஆத்ம சக்தி" புதுச்சேரி.

விளம்பரம்.

WANTED.

Subscriber for "Health and Infant Welfare" an Anglo-Tamil monthly edited by Dr. (Miss) Anna Thomas under the distinguished patronage of Her Excellency Lady Willingdon.

Annual Subscription Rs. 3. for India Burma & Ceylon.

Foreign Rs. 4.

Liberal Commission will be given to agents who can canvas subscribers and advertisements. For particulars apply with one anna stamp.

"ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்"

ஒரு ஆங்கில தமிழ் மாதப்பத்திரிகை. மாட்சிமை தங்கிய சென்னை கவர்னரவர்களின் மனைவியார் லேடி வில்லிங்டன் அவர்கள் தந்த உருவப்படத்தோடும், சுய விகிதத்தோடும் ஒவ்வொரு மாதமும் பதினைந்தாம் தேதி வெளிவரும்.

பத்திராதிபர் டாக்டர் மிஸ்ஸிஸ் அன்னதாமஸ் அம்மாள்.

வருஷ சந்தா ரூ 3. வெளி நாடுகளுக்கு ரூ. 4.

மானேஜர் :— ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்,

திருநெல்வேலி டவுன்.

TALISMANS AND CHARMS

For those People to Avoid all Sorts of Misfortunes and enter the Gates of Successful Life.

For Honour, Riches, Learning, and Greatness Rs.	7-8
For Health, Physical Strength, &c.	7-8
For power of Eloquence, Speeches, &c.	7-8
For Success in any Undertaking or Litigation, &c	10-0
For Success in Sport, Racing, Cards, Games of Chance &c.	7-8
For Success in Spiritual & Religious life Rs.	10-0
For Success in trade, and business	10-0
For Men's Love to women	7-8
For Woman's Love to men	10-0
For Love of Opposite Sex, attractive Power	7-8
For Agricultural Prosperity, Farming, Good Crops, etc.	7-8
For Success in Mining Plumbago &c.	100-0
For Success in gemming Rs.	225-0
Rabbi Solomon's Special Talisman for every success.	15-0
Specially valued and worn by every Successful Hebrew, 2nd quality	21-0
1st quality.	30-0

Note:—A money Order or G. C. notes will bring the Talisman to your door.

Extensive Life Readings One Rs. 15—0—0 Two Rs. 25—0—0, Three Rs. 30—0—0 or more at a time at Rs. 10—0—0 per Reading.

Always the full amount should be remitted in adavnce No V. P. P.

D. A. RAM DUTH,

ASTROLOGER,

No. 30 & 76, (G. S.) Cheku Street,

COLOMBO, (CEYLON.)

"நியாயாபிமானி"

பிரதி புதவாரந்தோறும் பிரஞ்சிந்தியாவில் வெளியாகும் ஓர் தமிழ் வாரப் பத்திரிகை.

இதன் வருஷ சந்தா ரூ. 4—0—0

அயல் நாடுகளுக்கு ரூ. 4—8—0

இதை ஒவ்வோரு தமிழரும் வாங்கிப்படித்துப் பயன்பெறுவார்களாக.

மானேஜர் :—நியாயாபிமானி,

காரைக்கால்.

IDEAL TEACHER.

போசிரியன்.

பள்ளிக்கூடங்களுக்கும், மற்றும் ஆசிரியர்களுக்கும், சிறுவர்களுக்கும் உபயோகமான மாதாந்தப் பத்திரிகை.

வருட சந்தா ரூ. 1—8—0 மாதிரி காப்பி அணா 3.

பாலர் கதாமஞ்சரி 22 சிறிய கதைகள்.

(300 Page) ரூ. 2.

N. VENKATARAYALU & SON,

Mutayalpet, MADRAS.

மதிப்புரை.

காஸி அன்வர் பாக்ஷா:—இப்பெயர்புனைந்த புத்தகம் ஒன்று கிடைக்கப் பெற்ருேம். அதில் பாக்ஷா அவர்களின் பெருமைகளையும் வீரச்செயல்களையும் விடாமுயற்சியையும் திறல்வாய்ந்த யுக்தியையும் தேசாபிமானத்தையும் பற்றி வெளியிடப் பெற்றிருக்கிறது. எம்மதஸ்தர்களும் வேற்றுமையின்றி வாங்கி வாசிக்கத்தக்கது. இதன் விலை அணு 6.

காந்தி மாலிகை:—இது மனம் வாக்கு காயம் என்னும் முத்திறத்தாலும் தேச ஊழியம் செய்கிற ஜனுப் மி. பீர்முகம்மது சாகிப் அவர்களால் இந்துதேச தலைவர்களின்பேரில் இனிய இசைப்பாக்களாக அதிவிமரிசையாய் பாடப்பெற்றுளது. இவ்விரண்டும் இ. செ. முகம்மது இப்ராகீம் ராவுத்தர், புத்தகசாலை, புதுமண்டபம், மதுரை. என்ற விலாசதாரிடம் கிடைக்கும்.

பெண் கல்வி:—இப்புத்தகத்தை தூத்துக்குடி பெரிய காட்டன் ரோட், மகா-ா-ஸ்ரீ. மு.பெ. மாரியப்ப நாடாரவர்கள் நமது பார்வைக்கு அனுப்பியமைபற்றி நாம் மிகவும் அன்பு செலுத்துகின்றனம். இப்புத்தகத்தில் பெண்கள் அவசியம் கல்வி கற்கத்தான் வேண்டுமென்பதைப் பல திருஷ்டாந்த தாஷ்டாந்தங்களுடன் நன்கு விளக்கியிருக்கிறது. அன்றியும் மனைவியும் புருஷனும் சம்பாஷிப்பதுபோல் சந்தர்ப்பம் நோக்கி அமைத்திருப்பதானது போற்றத்தக்கதேயாம். இத்தகைய நூற்களை நமது நாட்டு சகோதரிகள் அவசியம் வாங்கி வாசிக்கவேண்டுமென்பது நமது துணிபு.

குஸிமா:—இப்பெயர் கொண்ட ஒரு தமிழ் நவீன நாடகத்தை சென்னை Messrs. N. வெங்கட்டராயலு அண்டுசன் அவர்கள் நமது பார்வைக்கு அனுப்பியுள்ளார்கள். இந்நாடகமானது தற்கால நாகரீகப்போக்கை அனுசரித்து ஒவ்வொரு மரபினரும் தத்தம் பழக்க வழக்க சம்பாஷணைகளை தத்ரூபமாக எடுத்துக்காட்டி சிருங்காரமான நடையில் எழுதியிருப்பதானது ஆண் பெண் இருபாலருக்கும் ஓர் போதகாசிரியனைப்போல் பிரகாசிக்கும் என்பது நமது கோறிக்கை. இதன் விலை அணு 8.

கற்பகம்.

ஓர் செந்தமிழ் மாத சஞ்சிகை.

வ்ருஷ சந்தா ரூ 1—0—0 வெளிநாட்டிற்குசந்தா ரூ. 1—8—6

இதில் கல்வி, சாஸ்திரம், சுகாதாரம், கைத்தொழில் வேதாந்தம், இராஜாங்க ஜனங்க சீர்திருத்தங்கள், நூதன கற்பிதங்கள், மதவிஷயம், சிறுவர் சிறுமிகளுக்கான விஷயங்கள், உலகஅற்புதம், வர்த்தமானம் விநோதக்கூற்று முதலான அரும் விஷயங்களுடன் வெளிவருகிறது.

மானேஜர், கற்பகம் ஆபீஸ், புதுவை.

தமிழகம்.

மலாய் நாட்டிற்கு ஒரே தமிழ்ப் பத்திரிகையாகிய, "தமிழகம்" என்னும் உயர்தரப் பத்திரிகை வாரம் இருமுறையாய் பிரதிதிங்கள், வியாழக்கிழமைகள்தோறும் வெளிவருகிறது. நம்தமிழ்நாட்டிலிருந்து பினங்கு, சிங்கப்பூர், மலாக்கா முதலிய பிரதேசங்களை உள்படுத்திய மலாய் நாட்டில் குடியேறவும் பிழைப்புக்காகவும் வந்திருக்கும் தமிழ்ஜனங்களின் நன்மைகளைக் கருதியும் உரிமைகளைக்காக்கவும் இப்பத்திரிகை தோன்றியது. இது ஐக்கியமலாய் நாட்டிலுள்ள கோலாலம்பூர் பத்துரோட்டில் 186, 188, 190-ம் நெம்பர் கட்டிடங்களில் அமைக்கப்பெற்றிருக்கும் இண்டஸ்திரியல் அச்சுக்கூடத்தில் தமிழறிவாளிகளைக் கொண்டு நடத்தப்படுவது. இது மலாய்நாடு, இந்தியா, பர்மா, இலங்கை முதலிய பல நாடுகளில் விஸ்தாரமாய்ப் பரவுகின்றது, இதன் வருடசந்தா றிங்கி 10.00 ஆறுமாதத்திற்கு றிங்கி 5-50 மூன்று மாதத்திற்கு றிங்கி 3. 00, இந்தியா, பர்மா, இலங்கை, நாடுகளுக்கு வருடசந்தா ரூபாய் 15. ஆறுமாதங்களுக்குரூபாய்8. நீடித்து விளம்பரங்கள் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர் :—

"தமிழகம்" ஆபீஸ்,

நெம்பர் 190 பத்துரோட் கோலாலம்பூர்.

இந்து நேசன்.

சனிக்கிழமை தோறும் பிரசுரமாகும் வாராந்தத் தமிழ்ப் பத்திரிகை. இனிய வியாசங்களும் அரிய விஷயங்களும் அடங்கியிருக்கும்.

வருஷ சந்தா ரூ. 6—0—0 தனிப்பிரதி 0—2—0

வேண்டுவோர் இவ்விலாசத்திற்கு எழுதிக்கொள்ளலாம்.

மானேஜர், இந்துநேசன் ஆபீஸ்,

65, அரமணைக்காரத்தெரு மதராஸ்.

"கதாரஞ்சனி"

நாவல் நிறைந்த மாத சஞ்சிகை.

1922வரு ஜனவரிமாதம் முதல் நடைபெறுகிறது. இதில் இனிய தமிழ் நாவல்களே வெளிவரும். இப்போது மிக அற்புதமாயுள்ள நாவல் எழுதப்பட்டு வருகிறது. வருஷ சந்தா 1-4-0 வெளிநாட்டிற்கு 2—0—0 தனிகாப்பி 0—2—6.

இனம்! இனம்!!

வெளியாய் விட்டது! புதிய நாவல்கள்!!

புஸ்தக ஆர்டர்களுக்கு மோகனமணி நாவல் இனம்.

ராஜலக்ஷிமி	0-10—0	மதன சிங்கர்	0—8—0
கனகாங்கி	2—0—0	பூபாலன்	1-12—0
சரித்திர சந்திரிகை	0-12—0	பத்மநாபன்	0-14—0
விஷ்ணு புராணம்	3—0—0	திலோத்தமை	0—8—0
இராஜாம்பாள்	0-12—0	நீலமேகை	1—0—0
தசகுமாரன்	0—6—0	அதிபிரியை	1—2—0
திலோத்தமா	0-12—0	மதன கல்யாணி	4—8—0

இதர நாவல்களும் கிடைக்கும்.

ஸ்ரீ வாணிவிலாச லைபெரரி,

79, சுப்பையா செட்டி வீதி,

திருப்பாதிரிப்புலியூர்.

மதிப்புரை.

லக்ஷிமி:—இது ஓர் அரிய சித்திர சகிதமான இனிய மாதத் தமிழ் சஞ்சிகை. இதன் முதல் இரண்டு பிரதிகள் சென்னையம்பதி K. S. முத்தையா கம்பனியாரால் நமது பார்வைக்கு அனுப்பப் பெற்றமை பற்றி எமது மனமார்ந்த நன்றியை செலுத்துகிறோம். இது மழமழப்பான காகிதத்தில் முத்துப்போன்ற எழுத்துக்களால் பல அரிய பெரிய விஷயங்களுடன் வெளிவந்துலாவுவதானது தமி லகுக்கு எதிர்பாராத ஓர் அதிர்ஷ்டம் என்றே சொல்லவேண்டும். இத்தகைய சிறந்த பத்திரிகைகள் நீண்டகாலம் நிலவவேண்டுமென்று கடவுளை பிரார்த்திக்கின்றனம்.

மானேஜர்:—"லக்ஷிமி ஆபீஸ்"
188, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை.

பத்திராதிபர்களுக்கு ஓர் குறிப்பு:—

அடியிற் கண்ட எங்கள் ஞானசூரியன் விளம்பரத்தை தங்கள் பத்திரிகையில் பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அப்படி பிரசுரித்த பத்திரிகையையும் தங்கள் மாற்று விளம்பரத்தையும் எங்களுக்கு அனுப்பிவைத்தால் நாங்களும் எங்கள் ஞானசூரியன் பத்திரிகையில் பிரசுரித்து தங்களுக்கு பத்திரிகை அனுப்பிவைக்கிறோம்.

"ஞான சூரியன்"

இது ஒரு நிகரில்லாத மாத சஞ்சிகை.

இது இனிய செந்தமிழ் நடையில் அழகாக எழுதப்பெற்ற வியாசங்களைத் தாங்கி, ஆண் பெண் இருபாலருக்கும் படிக்கப் படிக்க நல்லறிவைக் கொடுத்து பரமானந்த மயமாய் ருசிக்கக்கூடியது. ஹிந்து முஸ்லீம்கள் முன்னேற்றம் அடையும் பொது நலத்திற்காகவே கங்கணம் கட்டி உழைப்பது. நமது சந்ததியார்கள் எதற்காகப் பிறந்தோம் என்பதையுணர்ந்து ஆத்மலாப சுயராஜ்சியம் அடைவதற்கு வேண்டிய வழிகளை அருமையாகப் போதித்துவருவது.

அநேக வேதாந்த நூற்களின் ஆசிரியர் பெருநாழி ஸ்ரீ கருணையானந்த ஞானபூபதி அவர்களால் பிரசுரிக்கப்பெற்றுலாவுகின்றது.

வருட சந்தா ரூ. 1—8—0 வெளிதேசங்களுக்கு ரூ. 2—0—0

ஞான சூரியன் ஆபீஸ், விஜயபுரம், திருவாரூர். S. I. Ry.

SCANNED

சந்தாதாரர்களுக்கு ஓர் லாபம்.

குறிப்பு:—நமது "ஞான சூரியன்" பத்திரிகையின் சந்தாவை 3-வது வருஷமாகிய இரக்தாக்ஷி வருடமுதல் ஒரு ரூபாயாகச் செய்யலாமா? அப்படிச் செய்தால் அதிக சந்தாதாரர்கள் சேர்வார்களா? என்று யூகிக்கப் பெறுகிறது.

மானேஜர்.

காலம் அருமையா!? பணம் அருமையா!?

மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் அவசியம் வாசிக்கவேண்டிய

வேதாந்த பாஸ்கரன்.

இப்புத்தகத்தின் முதற்பதிப்பானது எதிர்பாராத சொற்ப காலத்திலேயே செலவாகிவிட்டபடியால் இதன் பெருமை நாம் சொல்லாமலே விளங்கும். இப்போது இரண்டாம் பதிப்பு தயாராகி வருகிறது. இது கிரௌன் சைஸில் கண்ணைக் கவரத்தக்க பல ஆப்டோன் அப்பியாசப் படங்களுடன் மழமழப்பான வெள்ளைக் கிளேஸ் காகிதத்தில் முத்துப் போன்ற புதிய எழுத்துக்களால் அச்சிடப்பெற்று நூலாசிரியர் நமது ஞானபூபதி அவர்கள் திருவுருவப் படத்துடன், சீர்மை புல்காலிகோ பைண்டுமுதல் ராப்பர் பைண்டு வரையில் கிடைக்கும். முன்னுடியே அதிக ஆர்டர்கள் வந்திருப்பதால் அன்பர்கள் முந்திக்கொள்ளுமாறு எச்சரிக்கை செய்கிறோம்.

விஜயபுரம் "கருணாநிதி" அச்சியந்திரசாலையின் அதிபரும்
ஞான சூரியன் பத்திராதிபருமாகிய பெருநாழி
ஸ்ரீலஸ்ரீ கருணையானந்த ஞானபூபதி அவர்களால்
இயற்றி வெளியிடப்பெற்ற

	ரூ. அ. ப.
வேதாந்த பாஸ்கரன் முதற்பதிப்பு	1—0—0
போக ரகசியம் (ஒருபாகம்)	0—6—0
தோத்திரமஞ்சரி	0—4—0
கந்தப்புகழ்	0—2—0
திருப்பாவணி	0—2—0
முருகப்புகழ்	0—2—0
தெய்வப்புகழ்	0—2—0
காவடிக்கதம்பம்	0—2—0
முருகர் தியானம்	0—1—0
காவடிக்காட்சி	0—1—0
தெட்சணாமூர்த்தி பத்திரசக்கீர்த்தனை முதற்பாகம்	0—1—0
ஷை இரண்டாம்பாகம்	0—1—0
ஷை மூன்றாம்பாகம்	0—1—0

"ஞான சூரியன்" ஆபீஸ்,
விஜயபுரம்—திருவாரூர், S. I. Ry.

இப்பத்திரிகை ஸ்ரீ கருணையானந்த ஞானபூபதி அவர்களால் தமது விஜயபுரம் கருணாநிதி அச்சியந்திரசாலையில் பதிப்பித்துப் பிரசுரிக்கலாயிற்று.

SCANNED